# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-17 Issue-7 ஜூலை-2024 துல்ஹஜ்-மொஹரம் 1446

## இஸ்ரேலே திரும்பிப்பார்...

## ஹிஸ்புல்லாஹ் VS இஸ்ரேல்-2006 போர்





## உலக வரலாற்றில் அவுரங்கசீப்!

இதுவரை அறியப்படாத புதிய தகவல்கள்...



## நாலாந்தா பல்கலைக் கழகம்

வெளிச்சத்திற்கு வராத உண்மைகள்...

# வைகறை வெளிச்சம்

ஜூலை-2024 ■ துல்ஹஜ்-மொஹரம் 1446

■ தனிஇதழ் - ரூ. 40

■ ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480

■ வெளிநாடு - ரூ. 5000




மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!




**இஸ்ரேலே திரும்பிப்பார்... ஹிஸ்புல்லாஹ் VS இஸ்ரேல் - 2006 போர்** 4





**நாலாந்தா பல்கலைக் கழகம்**
வெளிச்சத்திற்கு வராத உண்மைகள்... 9





**உலக வரலாற்றில் அவுரங்கசீப்!**
இதுவரை அறியப்படாத புதிய தகவல்கள்... 20

அன்று போருக்குப்பின் துயர் துடைப்புப் பணியில் ஹிஸ்புல்லாஹ் - 7

மௌலானா ரூமி (ரஹ்) அவர்களின் தத்துவக் கருத்து - 18

மேற்குலக வெள்ளை இனத்தின் வரலாறு - 29

வரலாற்றில் திருக்குர்ஆன் - 31

ஃபாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு - 33

பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் - முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 41

கையில் கிடைத்தப் போராளி - 46

சிலுவைப் போர் 2.0 - 50

மகளிர் மன்றம் - 52

குழந்தை வளர்ப்பு - 54

மருத்துவம் - 56

தலையங்கம் - 58

தாஃவா - 60

தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள வரலாற்று கட்டிடங்களில் ஆதிக்கத்தை காட்டுவது எப்படி? - 62



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only

vaigarai velicham official

## இஸ்ரேலே திரும்பிப்பார்...

# ஹிஸ்புல்லாஹ் VS இஸ்ரேல்-2006 போர்



**ஜூலை 12ல்** தொடங்கிய இஸ்ரேல் லெபனான் போர் 34 நாட்கள் நீடித்து ஓய்ந்தது. இஸ்ரேல் தன் வரலாற்றில் இரண்டாவது முறையாக ஓர் இஸ்லாமிய இயக்கத்திடம் தோல்வியைச் சந்தித்திருக்கின்றது. முதன் முதலில் 1918ல் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தைச் சார்ந்த இலட்சியச் செல்வங்களிடம் படுதோல்வியடைந்தது. (பார்க்க விடியல் மார்ச் 2004)

இஸ்ரேல் இந்தப் போர் மூலம் பல காய்களை நகர்த்த எண்ணியிருந்தது. ஹிஸ்புல்லாஹ்வை அழிப்பதன் மூலம் தனது எல்லைகளை விரிவுபடுத்துவதோடு அமெரிக்காவுக்குப் பணியாமல் தலைநிமிர்ந்து நிற்கின்ற ஈரானைப் பணிய வைக்கலாம் என்பது அதன் முக்கிய நோக்கமாக இருந்தது. அத்தோடு லெபனானுக்குள் பேரழிவை ஏற்படுத்தி, ஹிஸ்புல்லாஹ்வை அழித்து சிரியாவையும் தனக்குக் கீழ்ப்படிய வைக்க இஸ்ரேல் எண்ணியிருந்தது. ஏனெனில் சிரியா ஹிஸ்புல்லாஹ்வுக்கும், ஃபலஸ்தீனப் போராளிகளுக்கும், ஹமாஸுக்கும் முழுஆதரவு அளித்து வருகிறது.

வேறு வார்த்தைகளில் சொன் னால், இந்தப் போரில் லெபனானைத் தோற்கடிப்பதன் மூலம், மேற்கு ஆசியாவையே அமெரிக் காவின் விருப்பப்படியும் அதன் அருமைத் தோழனான தனது விருப்பப்படியும் ஆட்டுவிக்கலாம் என்று இஸ்ரேல் மனப்பால் குடித்திருந்தது.

இதைத்தான் அது தனது புதிய மத்திய கிழக்கு திட்டம் என அறிவித்தது. (பார்க்க விடியல் வெள்ளி ஆகஸ்ட் 2006 இதழ்)

ஆனால் அல்லாஹ்வின் பெருங்கருணையினாலும் ஹிஸ்புல்லாஹ்வின் வீர தீரப் போராட்டத்தினாலும் இஸ்ரேல் தோற்றது. இதனால் ஹிஸ்புல்லாஹ் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான "எதிர்ப்பின் அடையாளமாக" நிமிர்ந்து நிற்கிறது. மேற்காசிய அரபுலக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக உயர்ந்து நிற்கிறது. போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த பிறகு அல்மனார் தொலைக்காட்சியில் தோன்றிய ஹிஸ்புல்லாஹ்வின் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ் அவர்கள், 'யுத்த ரீதியாகவும். வரலாற்று ரீதியாகவும் ஹிஸ்புல்லாஹ் இஸ்ரேலை வெற்றி கொண்டுள்ளது. இந்த வரலாற்றுத் திருப்புமுனையின் அடுத்த கட்டம் விரைவில் வரவிருக்கிறது" என்று அறிவித்தார். (Frontline, Sep 8, 2006.)

அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் உண்மை என்பது நாம் அங்குள்ள நிலைமையை அலசும் பொழுது விளங்கும். ஹிஸ்புல்லாஹ் ஆயுதங்களைக் கீழேபோட வேண்டும் என்று போர் நிறுத்தத்தின் பொழுது இஸ்ரேல் நிபந்தனை விதித்தது. ஆனால் ஒரு துப்பாக்கி


vaigarai velicham official

ரவையைக் கூட ஹிஸ்புல்லாஹ் படையினர் கீழே வைக்கவில்லை. இது ஹிஸ்புல்லாஹ் வுக்குக் கிடைத்த வெற்றி என்றால், ஹிஸ்புல் லாஹ்வின் சாதாரண ராக்கெட்டுகள் இஸ்ரேலைச் சேதப்படுத்தி, இஸ்ரேலுக்கு மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்தியது.

ஹிஸ்புல்லாஹ் மொத்தம் 4000 ராக்கெட்டு களை இஸ்ரேல் மீது வீசியது. இதன்மூலம் 12000 இஸ்ரேலிய வீடுகள் சேதப்படுத்தப் பட்டன அல்லது அழிக்கப்பட்டன. இஸ்ரேலிய நாளிதழான யெடியோட் அஹரோனாட் ஹிஸ்புல்லாஹ்வின் ராக்கெட் தாக்குதல் களினால் இஸ்ரேலுக்கு 103 கோடி டாலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்துள்ளது. இதுமட்டுமல்ல,

ஹிஸ்புல்லாஹ் ராக்கெட்டுகள் 1600 கார் களையும் 600 வியாபார நிலையங்களையும், 100 தொழிற்சாலைகளையும் சேதப்படுத்தியிருக் கின்றன. ஹைஃபா என்ற இஸ்ரேலிய தொழில் நகரத்தையே முற்றாகச் சேதப்படுத்தி விட்டன ஹிஸ்புல்லாஹ்வின் ராக்கெட்டுகள். அத்தோடு இஸ்ரேல் அந்தப் பகுதியில் ஏற்படுத்தி வைத்திருந்த இராணுவத் தடையையே உடைத் துவிட்டது ஹிஸ்புல்லாஹ்.

ஆகஸ்ட் 14ம் தேதி ஹஸன் நஸ் ருல்லாஹ் ஆற்றிய உரையில் "ஆயுதங்களைக் கீழே வைக்க மாட்டோம்" என்று பிரகடனப்படுத்தினார். இஸ்ரேலும் லெபனானும் சிரியாவும் சந்திக்கும் ஓரிடமான ஷெப்பா பண்ணை நிலங்களை இஸ்ரேல் இன்னும் ஆக்கிர மித்து வைத்திருப்ப தாக அந்த உரையில் குறிப்பிட்டார் அவர். ஹிஸ்புல்லாஹ் படையினரில் நிறைய பேர் இஸ்ரேல் சிறைகளில் இருக்கின்றனர். இந்தக் கைதிகள் பரிமாற்றம் குறித்தும், லெபனானுடைய பாதுகாப்புக்கான உறுதி குறித்தும் இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் எதுவும் பேசப் படவில்லை என்று குறிப்பிட்ட அவர், லெபனான் இன்னும் ஆபத் திலிருந்து மீளவில்லை என்றும் கூறினார்.

லெபனான் இராணுவம் இஸ்ரேலை எதிர் கொள்ளும் அளவுக்குப் பலம் பொருந்திய தில்லை எனவும், இஸ்ரேல் - லெபனான் எல்லையில் நிறுத்தப்பட்டிருக்கும் ஐ.நா.வின் கட்டுப்பாட்டிலுள்ள படையும் லெபனானுக் குப் பாதுகாவல் தரப்போவ தில்லை என்றும் குறிப்பிட்ட அவர், "லெபனான் எந்நேரமும் தாக்கப்படலாம். யார் அதனைப் பாதுகாப்பது?" என்று கேட்டார்.

நேட்டோ நாடுகளின் படைகளை எல்லையில் நிறுத்த இஸ்ரேல் எடுத்த முயற்சியும்



ஹஸன் நஸ்ருல்லாஹ்

தோற்றுப் போனது. மாறாக, ஐ.நா. பாதுகாப் புக் குழு தீர்மானம் 1701ன் படி, 15,000 பன்னாட்டுப் படைகள் நிறுவப்பட்டுள்ளன.

லெபனான் அரசும், ஹிஸ்புல்லாஹ்விட மிருந்து ஆயுதங்களைப் பறிப்பது எங்கள் வேலையல்ல என்று அறிவித்துவிட்டது. "எங்கள் இராணுவத்துக்கும் ஹிஸ்புல்லாஹ் சகோதரர்களுக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை" என்று லெபனானின் செய்தித் துறை அமைச்சர் காஸி அரிடி கூறினார்.

இஸ்ரேலின் இராணுவத் தாக்குதலை வெற்றிகரமாக முறியடித் ததற்காக லெபனான் பிரதமர் ஃபுஆத் சினியோரோ ஹிஸ்புல் லாஹ்வை வாயாரப் பாராட்டினார். தேசம் முழுவதும் ஒளிபரப்பப்பட்ட அவரது தொலைக் காட்சி உரையில் அவர் இவ்வாறு கூறினார்:

"எதிர்க்க முடியாத, தோற்கடிக்க முடியாதது அல்ல இஸ்ரேலியப் படை என்பதை ஹிஸ்புல் லாஹ்வின் இந்த வெற்றி பறை சாற்றியிருக் கிறது!"

இன்னொரு இஸ்ரேல் விஷயத்திலும் வெற்றியடையவில்லை. அது ஹிஸ்புல்லாஹ்வின் மக்கள் சேவையைச் செல்வாக்கில்லாமல் ஆக்கிடச் செய்த முயற்சி.

ஹிஸ்புல்லாஹ் தலைவர் ஹஸன் நஸ்ருல் லாஹ் இடம் பெயர்ந்த லெபனானிய குடும்பங்

களுக்கு ஒரு வருட வீட்டு வாடகை, வீட்டுக்குத் தேவையான அத்தியாவசிய மரச்சாமான்களுக்கான பணம் அனைத்தும் ஹிஸ்புல்லாஹ்வின் சார்பில் வழங்கப்படும் என்று அறிவித் துள்ளார். தகர்க்கப்பட்ட வீடுகளின் இடிபாடுகளையும் ஹிஸ்புல்லாஹ் படையினர் அகற்றித் தருவார்கள் என்றும் அவர் கூறி யுள்ளார்.

பொறியாளர்களும் கட்டட ஒப்பந்ததாரர்களும் மரச்சாமான் வியாபாரிகளும் விலைகளைக் கூட்ட வேண்டாம் என்றும், துயர்துடைப்புப் பணிகளில் அவர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈரானையும் சிரியாவையும் பய முறுத்துவதற்குப் பதிலாக இந்தப்போர் அந்த நாடுகளுக்குப் பெரும் ஊக்கத்தையும், தைரியத்தையும் தந்துள்ளது. ஆகஸ்ட் 15 அன்று சிரியாவின் அதிபர் பஷார் அல் அஸத் அவர்கள் ஆற்றிய உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்:

"ஹிஸ்புல்லாஹ் ஒரு மகோன்னத யுத்தத்தில் வெற்றி பெற்றிருக்கிறது. இந்தப் பகுதியின் பாதுகாப்புச் சமநிலையையே அது மாற்றிவிட்டது. போரின் துவக்கத்திலேயே இஸ்ரேல் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. 1982ல் லெபனான் மீது ஆக்கிரமிப்புப் போரில் 7 நாட்களில் இஸ்ரேல் பெய்ரூத்தைச் சூழ்ந்தது. ஆனால் இந்தப் போரிலோ, 5 வாரங்கள் கழித்தும் சில நூறு மீட்டர்களைப் பிடிக்கவே இஸ்ரேல் இன்னும் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறது.

மேற்காசியாவில் அமெரிக்கா தனது அபிலாஷைகளைத் திணிக்க முடியவில்லை. தனது விருப்பப்படி மத்திய கிழக்கை (மேற்காசி யாவை) மாற்ற வேண்டும் என்ற அமெரிக்காவின் ஆசை வெறும் மாயையாகிப் போயிருக்கிறது. (Frontline Sep 8, 2006)

ஈரானின் முக்கியத் தலைவர் ஆயத்துல்லாஹ் அலீ காமினி அவர்கள் ஹிஸ்புல்லாஹ்வைப் புகழ்ந்தார். அவரது வாழ்த்துக்கள்...

"இஸ்லாமிய உலகுக்கு நீங்கள் இப்பொழுது பறை சாற்றியிருப்பது எனது வார்த்தைகளுக் கெல்லாம் அப்பாற்பட்டது. இறைவிசுவாசம், நிலைகுலையாமை, அர்ப்பணிப்பு இவைகளுக்கு முன் நவீன ஆயுதங்கள் சாதிக்க போவது ஒன்றுமில்லை என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறது உங்கள் வீர தீர ஜிஹாதி இஸ்ரேலுக்கெதிரான போரட்டம் ஓயவில்லை. புதிய சூழலில் நீங்கள் செய்யும் ஜிஹாதிகளிடம் பொறுமை, புத்திசாலித்தனம் அர்ப்பணிப்பு ஆகியவைதான் மிகமுக்கிய அம்சங்களாக இருக்கும்.

எகிப்தில் இயங்கும் அபிவிருத்தி ஆய்வுக்கான இப்னு கல்தூன் மையம் நடத்திய கருத்துக் கணிப்பில் மேற்காசியாவில் தற் பொழுது மிகப் பிரபலமான மனிதர்களில் முதலிடத்தைப் பிடித்திருப்பது ஹிஸ்புல்லாஹ்வின் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ் தாம்.

அந்த வரிசையில் ஹமாஸ் தலைவர் காலித் மிஷ்அல் இரண் டாவது இடத்தையும், ஈரான் அதி பர் மஹ்மூத் அஹமதி நஜாத் மூன் றாவது இடத்தையும் பிடித்துள்ளனர். ஃபலஸ்தீனப் பகுதிகளில் வெற் றிக் கொண்டாட்டங்களைப் பற்றி கேட்கவே தேவையில்லை. ஃப லஸ்தீன் பகுதிகள் முழுவதும் கடல்அலை போல் எங்கு பார்த்தாலும் ஹிஸ்புல்லாஹ்வின் மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கின்றன. ஹஸன் நஸ்ருல்லாஹ்வின் படம் பொறித்த சுவரொட்டிகளுக்கு அங்கே படுகிராக்கி! ஃபலஸ்தீனில் நடக்கும் திருமணங்களிலும், இதர பொது நிகழ்ச்சிகளிலும் கீழ்க்கண்ட பாடலே பாடப்படுகின்றன.

"நாங்கள் அவர்களை வாழ்த்துகிறோம்...

அவர்கள்தான் லெபனானின் நம்பிக்கை நட்சத்திரங்கள்...

இங்கே அவர்கள் என்பது ஹிஸ்புல்லாஹ் படையினரைக் குறிக்கும். சிரியாவின் தலைநகர மான டமஸ்களிலும் இதே நிலை தான். ஆரஞ்சும் பச்சையும் கலந்த நஸ்ருல்லாஹ்வின் படம் பொறித்த பெரிய பெரிய பலகைகள்தான் டமஸ்கஸ்ஸின் முக்கிய இடங்களில் அலங்கரிக் கின்றன. லெபனானுக்குள்ளே வருவோம்.

லெபனா னின் முன்னாள் பிரதமர் மைக் கேல் அவ்னின் சுதந்திர தேசப்பற் றாளர் இயக்கம் (Free Patriotic Movement - FPM) ஹிஸ்புல்லாஹ் வுடன் இணைந்து செயல்படுவதால் அங்கே ஒரு புதிய ஐக்கியமே உருவாகியிருக்கிறது. முஸ்லிம் கிறிஸ்தவ ஒற்றுமையில் லெபனான் நாடே தலைநிமிர்ந்து நிற்கிறது. - MSAH


vaigarai velicham official



# அன்று போருக்குப்பின் துயர் துடைப்புப் பணியில் ஹிஸ்புல்லாஹ்

**போர்க்** களத்தில் உயிரைத் துச்சமாக மதித்து வீரதீரத்துடன் போராடிய ஹிஸ்புல்லாஹ் அறப்போராளிகள், போர் நிறுத்தம் ஏற்பட்டவுடன் துயர்துடைப்புப் பணிகளில் இறங்கி விட்டனர்.

அவர்கள் தங்கள் ஆயுதங்களை விற்று மண்வெட்டிகளும் விளக்கு மாறுகளும் பணமும் பெற்று சமூக சேவையில் இறங்கிவிட்டனர்.

போர் சமயத்தில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியவர்கள் இப்பொழுது இடிந்து நொறுங்கிக் கிடக்கும் தங்கள் வீடுகளை நோக்கி திரும்புகின்றனர்.

"தெற்கு லெபனானில் மீண்டும் பழைய வாழ்க்கையைக் கொண்டு வருவதற்காக நாங்கள் பாடுபடுகிறோம். போருக்கு முன் இருந்ததை விட சிறப்பான நிலையை இப்பொழுது கொண்டு வர முனைகிறோம்" என்று ஹிஸ்புல்லாஹ்வின் மூத்த தலைவர் நபில் கவோக் கூறியுள்ளார். கிராமங்களில் ஹிஸ்புல்லாஹ் படையினர் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர். டி ஷர்ட்டுகளும், பச்சைத் தொப்பிகளும் அணிந்துகொண்டு அவர்கள் இடிபாடுகளுக்குள் தயங்காமல் இறங்குகின்றனர். குவிந்து கிடக்கும் கற்களையும், அழுகிக் கிடக்கும் பொருட்களையும் சிறிதுகூட முகம் சுளிக்காமல் அவர்கள் அகற்றுகின்றனர்.

இடிந்த வீடுகளையுடையோருக்கு அவர்களது வீடுகள் சரியாகும் வரை தங்குவதற்காக ஒரு வருட வீட்டு வாடகைப் பணமும், அத்தியாவசிய மரச்சாமான்களும் ஹிஸ்புல்லாஹ் படையினர் அளிப்பதுதான் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

போர் நிறுத்தம் ஏற்பட்ட ஒரு மணி நேரத்திலேயே ஹஸன் நஸ்ருல்லாஹ் அவர்கள் இதற்கான வாக்குறுதியைப் பிரகடனப் படுத்தினார். இதனால் 15,000 குடும்பங்கள் பலன் பெறும். இந்தத் திட்டத்தினால் மொத்த பாராட்டுதலையும் அரபுலகத்தின் ஹிஸ்புல்லாஹ் பெற்றுள்ளது.

வீடு, பொருட்கள் என்று அனைத்தையும் இழந்த அமர் பல் ஹாஸ் என்பவர் தனது இடிந்து போன வீட்டின் முன் நின்று கொண்டு இவ்வாறு கூறினார்: "செய்யத் ஹஸன் (நஸ்ருல்லாஹ்) சொன்னால் நாங்கள் கேட்போம். அவர் சொன்னால், நான் ஹிஸ்புல்லாஹ்வுக்காக என் உயிரையும் கொடுப்பேன்!"

(Frontline, Sep.8,2006)

இஸ்ரேலின் தாக்குதலினால் ஏற்பட்டுள்ள ஆபத்து இன்னும் ஓயவில்லை. இஸ்ரேல் போட்ட




குண்டுகளில் ஆயிரக்கணக்கான குண்டுகள் இன்னும் வெடிக்காமல் கிடக்கின்றன.

எனவே மனித உரிமை அமைப்புகள் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு, பாதிக்கப் பட்ட பகுதிகளைச் சுத்தப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளன.

லெபனான் இஸ்ரேல் எல் லையிலிருந்து விடானி ஆறு வரை உள்ள பகுதிதான் போரில் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதி, ஆதலால் இந்தப் பகுதி இப்பொழுதும் மிகவும் ஆபத்தான பகுதியாகக் கருதப்படுகிறது.

வெடிக்காத குண்டுகள் இங்கே வயல்வெளி களிலும், சாலைகளிலும் பரவலாகக் கிடக்கின் றன. இதனால் விவசாயிகள் தங்கள் நிலங்களில் இறங்கி வேலை செய்யத் தயங்குகின்றனர்.

கிளஸ்டர் குண்டுகள் என்று சொல்லப்படும் கொத்து வெடி குண்டுகள்தான் மிகவும் மோசமானவை.

இஸ்ரேல் போட்டதில் நான் கில் ஒரு பகுதி குண்டுகள் வெடிக் காமல் இருக்கின்றனவாம். ஒருவர் அதன் எண்ணிக்கை ஒரு லட்சமாக இருக்கலாம் என்று கணிக்கிறார். இஸ்ரேல் போரின் இறுதிக் கட் டத்தில்தான் அதிகமான கிளஸ்டர் குண்டுகளைப் போட்டது.

"இந்த வகையான குண்டுகள் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் போடப்படவே கூடாது" என்று ஐ.நா. பொதுச் செயலாளர் கோஃபி அன்னான் கூறியுள்ளார். (தி ஹிந்து 06.09.2006)

இஸ்ரேலின் கோரத் தாக்குதலில் மின் நிலையங்களும் டிரான்ஸ்ஃபார்மர்களும் குறி வைத்துத் தாக்கப்பட்டன. இதனால் தெற்கு லெபனானில் மின் வினியோகம் கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளது. மின் வினியோகத்தை தெற்கு லெபனானில் மீண்டும் பழைய நிலைக்கே கொண்டு வருவதுதான் உடனடிப் பணி. லெபனானின் பின்த் ஜிபைல் நகரம்தான் இதில் மிகவும் பாதிக் கப்பட்டுள்ளது.

அந்த நகரத்திலுள்ள 35 டிரான்ஸ்ஃபார் மர்களில் 32 டிரான்ஸ்ஃபார்மர்கள் அழிக்கப் பட்டன. தெற்கு லெபனானின் 90 சதவீத வீடுகள் இன்று மின்சாரம் இல்லாமல் இருண்டு கிடக்கின்றன. மின்சாரம் இல்லாததால் தண்ணீர்த் தட்டுப்பாடு கடுமையாக இருக்கிறது. குடிப்பதற்கு சர்வ தேச தொண்டு நிறுவனங்கள் பாட்டில் தண்ணீரை விநியோகித்து வருகின்றன.

நிலத்தடி நீரை அதிகமாக நம்பியிருக்கும் லெபனிய மக்களுக்கு. தண்ணீரை மேலே இழுப்பதற்கு மின்சாரம் அதிக தேவை. ஆத லால் மின்சாரமும் இல்லாமல், தண்ணீரும் இல்லாமல் லெபனிய மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். இந்த மக்கள் படும் அல்லல்க ளுக்கெல்லாம் இஸ்ரேலும், அதன் 'மாஸ்டரான' அமெரிக்காவும் ஒரு நாள் விலை தந்தேயாக வேண்டும். அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை இன்ஷா அல்லாஹ்!



# நாலாந்தா பல்கலைக் கழகம்...

## வெளிச்சத்திற்கு வராத உண்மைகள்...

**நுழைவு வாயில்....**

*"நாலாந்தா பல்கலைக்கழகம் முஸ்லிம் மன்னனால் எரிக்கப்பட்டது என மோடி வகையறாக்கள் மீண்டும் பிரச்சாரம் செய்யத் தொடங்கியுள்ளனர் என்ற தகவலை வழக்கறிஞர் ஜாஹிர் பாதுஷா நமது வரலாற்றுத் துறை ஆர்வலர் ஜாஹிர் உசைன் அவர்களிடம் கூறியுள்ளார்.*

*தம்பி ஜாஹிர் உசைன், உடனேயே ஒரு மறுப்பை அனுப்பி வைத்தார்கள். அந்த மறுப்பு, நாம் நிறுவி நடத்தி, பின்னர் தாரைவார்த்துத் தந்த விடியல் வெள்ளி மாதஇதழில் இடம் பெற்றது.*

*18.6.2003இல் துக்ளக் குருமூர்த்தியின் கட்டுரைக்கு எழுதிய பதில்,*

*எழுதியவர் வரலாற்றாய்வாளர் செ.திவான் அவர்கள்.*

**நாலந்தா** *பல்கலைக்கழகத்தை பற்றி துக்ளக் 18.6.2003ஆம் தேதி வார இதழில் பக்கம் 6ல் 'உணர்வோம்' என்ற தலைப்பில் எஸ். குருமூர்த்தி, நாலந்தா பல்கலைக்கழகத்தை கில்ஜி என்கிற முஸ்லிம் மன்னன் தீக்கிரையாக்கி அழித்தான் என்று எழுதியிருந்ததை கீழக்கரை விடியல் வாசகர் புரொபஸர் பக்ருதீன் அவர்கள் விடியலுக்கு சுட்டிக்காட்டி. உண்மையான நிலவரத்தை வெளிக்கொண்டு வருமாறு கேட்டுக் கொண்டார். வரலாற்றுப் பேராசிரியர் செ.திவான் உண்மை விளக்கம் தருகிறார்.*

வரலாறு என்பது பெருங்கடல். அதில் தோன்றி மறையும் அலைகளைப் போல், அரசுகளும் நாகரீகங்களும் தோன்றியும் மறைந்தும் வருகின்றன.

ஆட்சிமுறைகள், அரசோச்சுபவர்களின் அணுகுமுறைகள் காலத்திற்கேற்ப மாறிக் கொண்டே வருகின்றன.

'வரலாற்று நிகழ்வுகள் மனிதன் விட்டுச் சென்ற காலச்சுவடுகள். அவற்றை அறியாத எவரும் எதனையும் சாதிக்க முடியாது' என்கிறார் பேராசிரி யர் ஷேக்அலி.

தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களின் வரலாற்றையும் தெரிந்திராத எவராலும் ஒரு புதிய வரலாற்றினைப் படைத்திட முடியாது.

ஒரு சமுதாயத்தினை அழித்திட வேண்டுமானால், முதலில் அச்சமுதாயத்தின் வரலாற்றினை அழித்தாலே போதுமானது. அப்புறம் மெல்ல, மெல்ல அந்தச் சமுதாயத்தினை அழிவினை நோக்கி எளிதில் கொண்டு சென்று விடலாம்.

இன்று முஸ்லிம்களின் வரலாறுகள், முறையாக புதிய தலைமுறையினருக்கும், மாணவ - மாணவியர்க்கும் எடுத்துச்

சொல்லப்படுவதில்லை. அதுமட்டுமின்றி முஸ்லிம்களின் வரலாறுகள் முழுவதுமாக மாற்றப்பட்டும் அல்லது மறைக்கப்படும் நிலைமைகளும் உலகெங்கும் வேகமாக ஏற்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக இந்திய நாட்டில் அத்தகைய நாசப்பணி வேகமாக நடந்தேறிக் கொண்டிருக்கின்றது.

இந்திய முஸ்லிம் ஆட்சியாளர்களைப் பற்றிய வரலாற்றில் முற்றிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விஷயங்களைக்கூட இப்போது மாற்றத்துவங்கியிருக்கின்றார்கள். அதே வேளையில் "பொய்யைச் சொல், அதனைத் திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டே இரு! அதுவே கால கதியில் உண்மையைப்போல் ஆகிவிடும்" என்ற அடால்ப் ஹிட்லரின் பாணியைப் பின்பற்றி வருபவர்கள் ஆட்சியில் வீற்றிருக்கின்றார்கள்.

இவர்கள் முஸ்லிம்களைப் பற்றிய கருத்துக் களையும் முஸ்லிம் ஆட்சியாளர்களைப் பற்றிய தவறான சரித்திரச் செய்திகளையும் வரலாற்றில் நடை பெற்றிராத நிகழ்ச்சிகளையும் நித்தம் நித்தம் சொல்லிக் கொண்டும் பேசிக் கொண்டும் எழுதிக்கொண்டும் பரப்பிக் கொண்டும் வருகிறார்கள்.

பள்ளிப் பாடநூலில் வரலாற்றினை திரித்துத் திணித்து கொண்டும் வருகின்ற முயற்சிகள் நாட்டின் நல்லோரது நெஞ் சத்தில் கவலையை அளித்து வருகிறது.

இந்த வகையில் 18.6.2003 தேதியிட்ட துக்ளக் இதழில் எஸ். குருமூர்த்தி எழுதிய கட்டுரையில் (பக்கம்-6) "கி.மு. 4ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட நாலந்தா பல்கலைக் கழகத்தில் கையால் எழுதப்பட்ட 50,000 புத்தகங்கள் கொண்ட நூல் நிலையம் இருந்தது. ஆயிரக்கணக்கான மாணவர்களும் படித்து வந்தார்கள். இந்தப் பல்கலைக் கழகத்தை கில்ஜி என்கிற முஸ்லிம் மன்னன் தீக்கிரையாக்கி அழித்தான்" என்று குறிப்பிட்டுள்ளார். இது துக்ளக் இதழோடு நின்றுவிட வில்லை.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், 2003ல் வெளியிட்ட 9வது வகுப்பிற்கான சமூக அறிவியல், வரலாறு, குடிமையி யல், புவியியல் நூலில் வரலாறு பகுதிகளை டாக்டர் சி. பால கிருஷ்ணன், இல.ராமமூர்த்தி மேலாய்வில் எஸ்.வசந்தா, செல்வி தா.சீதாலட்சுமி ஆகியோர் எழுதி வெளியிட்டடுள்ளனர். அதில் பக்கம் 126ல் ஐபக்கின் படைத் தளபதிகளில் ஒருவரான முஹமது கில்ஜி என்பவர் பிஹார், வங்காளம், ஆகியவற்றைக் கைப்பற்றி, கி.பி. 1197ல் நாலந்தா பல்கலைக் கழகத்தை தரை மட்டமாக்கினார். இச்செயலால் அங்கு வாழ்ந்து வந்த புத்த துறவிகள் நேபாளம், திபெத் ஆகிய நாடுகளுக்கு தப்பி ஓடினர். அங்கு புத்த சமயம் வளர இந்நிகழ்ச்சியும் ஒரு காரணமாக அமைந்தது." என்று எழுதியுள்ளனர்.

துக்ளக் இதழில் குருமூர்த்தி கில்ஜியை மன்னன் என்கிறார், ஒன்பதாம் வகுப்பு பாடநூலில் கில்ஜியை படைத் தளபதி என்கிறார்கள். இவர்கள் எதையோ இட்டுக் கட்டுகின்றார்கள். என்பது இதிலிருந்து தெரிகின்றது.

இது குறித்து வரலாற்றின் வெளிச்சத்திற்கு வேண்டிய உண்மைகள் என்ன?

**நாலந்தா**

நாலந்தா பல்கலைக் கழகம் பீகார் மாகாணத்தில் கங்கை நதி அருகில் உள்ள பாராக்கான் (BARAGON) என்னுமிடத்தில் இருந்ததாக சர். அலெக்சாந்தர் கன்னிங் ஹாம் (1814- 1893) கூறுகிறார்.

(THE COINS OF MEDIEVAL INDIA)

'கயாவிலிருந்து 80 கி.மீ. தூரத்தில் பாடலி புத்திரத்திற்குத் தென்கிழக்கே இராகுலஸ் தீபத்திலிருந்து 10.கி.மீ தூரத்தில், மகா போதி யிலிருந்து வட கிழக்கே ஏழு யோசனை தூரத்தில் நாலந்தா பல்கலைக் கழகம் அமைந்திருந்தது.

**நாலந்தாவின் தொன்மை**

தோன்றிய காலம் எது என்பது இன்றும் வரலாற்று ஆய்வாளர்களுக்குத் திட்டமாகத் தெரியவில்லை. பலவிதமாக பல சரித்திர ஆராய்ச்சியாளர்கள் அதன் தோற்றத்தைப் பற்றிக் கூறுகிறார்கள். அது குறித்த ஒருமித்த முடிவைக் காண்பது அரிதாயிருக்கின்றது.

எவ்வாறாயினும் நாலந்தா, புத்தர் காலத்தி லேயே (கி.மு. 6ஆம் நூற்றாண்டு) இருந்திருக்க வேண்டும். புத்தரின் சீடரான ஆனந்தருடன் புத்தர் சென்ற பல இடங்களுள் நாலந்தாவும்


vaigarai velicham official



கூறப்பட்டுள்ளது. புத்தரின் சீடர் சாரி புத்தா காலத்தில் நாலந்தா பேசப்படுகிறது. சாரிபுத்தர் நாலந்தாவில் பிறந்தவர். அதனருகில் ராஜ கிருகத்தில் புத்தர், சாரி புத்தரைத் தனது சீடராகப் பெற்றார் என்பதிலிருந்து நாலந்தா புத்தர் காலத்திலே தோன்றியது புலனாகிறது.

கி.பி. 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரை நாலந்தா இருந்த நிலைமையை சீனா, திபெத்து முதலிய நாட்டு சரித்திர ஆசிரியர்கள் விரிவாக எழுதி வைத்துள்ளார்கள்.

**நாலந்தாவை உருவாக்கியவர்கள்**

வரலாற்றுச் செய்திகளை ஆராய் கின்றபோது முதன் முதலாக அசோகச் சக்கரவர்த்தி கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அங்கு ஒரு புத்த விகாரத்தைக் கட்டினார் என்பதை அறிகிறோம். புத்தரின் மறைவிற்குப் பின்னர் முதலாம் குமார குப்தன் என்று கருதப்படுகின்ற சக்கராதித்தன் (SAKRADITYA) ஒரு மடத்தை அங்கே கட்டினார்.

மாஞ்சோலையாக இருந்த அவ்விடத்தை பத்துகோடி தங்கக் காசுகள் கொடுத்து வியாபாரிகள் வாங்கி அதனை முதலில் புத்தரிடம் வழங்கினார்கள். அவ்விடத்தில் தான் அசோகராலும், சக்கராதித்தராலும் கட்டடங்கள் எழுப்பப் பட்டன. சக்கராதித்தர் கட்டிய கட்டடமே பின் பல்கலைக் கழகமாக மாறியது.

அவருக்குப் பின் அவரது மகன் புத்த குப்தர் தந்தையின் பணியைத் தொடர்ந் தார். பின்னர் மகன் தாதகட்டன் (தாதங்க குப்தர்) மூன்றாவது மடத்தை அமைத்தார். பாலாதித்தியர் 300 அடி உயரமுள்ள கோபுரம் கொண்ட கோயில் ஒன்றைக் கட்டினார். அவரது காலம் கி.மு. 2ஆம் நூற்றாண்டு.

**நாலந்தா மடாலயம்**

இங்கு 10,000 மாணவர்கள் பயின்றனர். 1510 ஆசிரியர்கள் பணி புரிந்தனர். நாள்தோறும் பல்வேறு தலைப்புகளில் சுமார் 100 கருத்தரங் குகள் நடத்தப்பட்டன என்கிறார் யுவான் சுவாங்.

கி.பி ஐந்தாம் நூற்றாண்டின் தொடக் கத்தில் பயணம் மேற்கொண்ட சீனப் பயணி பாஹியான் (FA-HIEN) நாலந்தா பல்கலைக் கழகம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

கி.பி. 649ல் இந்தியாவிற்கு வர எண்ணி, கி.பி. 673ல் இந்தியாவிற்கு வந்த சினப் பயணி இட்சிங் (I-TSING) 695ல் சீனாவிற்குத் திரும்பி 713 வரை வாழ்ந்து மறைந்த அவர் இந்தியவைப் பற்றியும் நாலந்தா பற்றியும் எழுதியுள்ளார்.

சீனப் பயணி இட்சிங் நாலந்தாவில் 3000 துறவிகள் (மாணவர்கள்) வசித்ததாகக் கூறுகிறார்.

**அகழ்வு ஆய்வுகள்**

நாலந்தா இருந்த இடம் இப்பொழுது மேடுகளும் மரங்களும் நிறைந்து காணப்படு கின்றது. தொலைவிலிருந்து பார்த்தால் அவை தொடர்ச்சியான குன்றுகள் போலத் தெரிகின் றன. கி.பி.1861ஆம் ஆண்டில் ஜெனரல் கன்னிங் ஹாம் பல்கலைக் கழகம் இருப்பதாக அறிந்து கூறினார். பிறகு 1915ல் மேடுகள் தோண்டி எடுக்கப் பட்டன. அவற்றின் பரப்பு 1600 அடி நீளம் 800 அடி அகலத்திற்கு உட்பட்ட இடமாகும். ஒன்றின்கீழ் ஒன்றாக ஐந்து அடுக்குகளாக இக்கட்டடங்கள் அங்கு காணப் படுகின்றன.

வரலாற்றுத் துறையில் புகழ்பெற்று விளங்கும் வரலாற்று ஆய்வாளர் ராமசரண் சர்மா தனது பண்டைக்கால இந்தியா (AN-CIENT INDIA) நூலில் பௌத்தமும் நாலந்தாவும் என்ற சிறு தலைப்பில் இவ்வாறு கூறுகிறார்:

"எஞ்சிய மண்மேடுகள் அகழ்வாய்வு செய்யப்பட்டாலும், 10,000 மடத் துறவிகள் தங்கும் அளவுக்கு இந்தக் கட்டடங்கள் அத்தனை விசாலமானவை அல்ல." சீன யாத்திரிகர் இட்சிங் அங்கு 3000 துறவிகள் வசித்ததாகக் கூறுகிறார். இது நியாயமான கூற்றாகும் என்கிறார் ஆர்.எஸ். சர்மா.

(தமிழில் மாஜினி, 'பண்டைக் கால இந்தியா', 2001 பக் 355)

"யுவான் சுவாங்கிடம் போதுமான அளவு உற்று நோக்கும் ஆற்றல் இல்லை. பார்த்தவற்றை செழிப்புடன் அலசி ஆராயும் பயிற்சியும் இல்லை. தெரிந்து கொண்ட செய்திகளை, உள்ள நிறைவு தரும் முறையில் எழுதி வைக்கும் திறனும் இல்லை" என்ற வாட்டர்னன் கூற்றை இங்கு நினைவு கொள்வோம்.

(K.A. NILAKANTA SASTRI, FOREIGN NOTICES OF SOUTH INDIA. MADRAS. 1972. P. 15.)

**நாலந்தா - போதிக்கப்பட்டவைகள்**

நாலந்தாவில் பயின்றவர்கள் 10,000 பேர்களா? 3000 பேர்களா? என்ற கேள்வியை முன்வைத்த நிலையில் அங்கு பயிற்றுவிக்கப்பட்ட பாடங்கள் பற்றிய செய்திகளைப் பார்ப்போம்.

பௌத்த மதத்தின் சிறப்பான அம்சமாக விளங்கிய 18 பிரிவுகளைப் பற்றிய கருத்துக்களும் (பௌத்தம் இங்கிருந்த ஜாதி கொடுமைகளுக் கெதிராகத் தோன்றியது என்பதைக் கவனிக்க வேண்டும்.) இந்து மத வேதங்களும் நாலந்தாவின் பாடத் திட்டத்தில் இருந்தன. வேதங்கள் அதர்வ வேதம், ஹித்து வித்யா (HETU-VIDYA) (இலக்கணம், தத்துவம்) சிகித்த வித்யா (CHIKISTAVIDYA) (மருத்துவம்) சாங்கையா (SANGHYA) நியாயா (NIYAYA) யோகசாஸ்திரம் (YOGASASTRA) போன்ற வைகள் அங்கு கற்றுக் கொடுக்கப்பட்டது.

யுவான் சுவாங் நாலந்தா பல்கலைக் கழகத்தில் ஐந்து ஆண்டுகள் மாணவரா கத்தங்கி பௌத்த இலக்கியங்களையும் ஹிந்து வேதங்களையும் கற்றார்.

**விவாதங்கள் - சொற்போர்கள்**

இங்கு தினமும் விவாதங்களும் சொற்போர் களும் நடைபெற்றன.

சிம்மரஸ்மி (SIMHARASMI) என்ற மிகப் பெரும் கல்வியாளர் தாம் வழி நடந்த கருத்துக்களை விளக்கிக் கொண்டிருந்த சமயம் யுவான் சுவாங்கின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் அவமானம் அடைந்து, பல்கலைக் கழகத்தை விட்டுச் சென்றார். கயாவில் புனித போதி மடாலயத்தை அமைத்தார்.

அவரது மாணவர்களில் சிறந்து விளங்கிய கிழக்கு இந்தியாவைச் சேர்ந்த சரித்திர சிம்மாவை யுவான் சுவாங்குடன் வாதிட அழைத்து வந்தார். ஆனால் சரித்திர சிம்மாவும் யுவான் சுவாங்கிடம் தோல்வியே கண்டார்.

நாலந்தாவில் வாழ்ந்த தத்துவஞானி, தம்முடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை 40 விஹாரத்தின் கதவுகளில் தொங்க விட்டு, இதில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களை எவரேனும் மறுத்துப் பேசினால் தம்முடைய தலையைப் பரிசாகத் தருவேன் என்று சவால்விட்டார். பலர் முன்னிலையில் யுவான் சுவாங் அவரை வென்றார். தலையைப் பெறாத யுவான் சுவாங் அவரைச் சீடராக ஏற்றார்.

கனோஜ் நகரில் ஹர்ஷர் பேரவை யைக் கூட்டியபோது 18 அரசர்கள், 3000 மஹாயன, ஹீனயான பௌத்தத் துறவிகள், 3000 பிராமண நிர்கிரந் தாக்கள், நாலந்தா பல்கலைக் கழகத்


vaigarai velicham official

திலிருந்து 1000 அறிஞர்கள் கூடிய கூட்டம் நடைபெற்றது.

யுவான் சுவாங் ஹுனயானப் பிரிவின் சிறப்பைக் குன்றச் செய்தார் என்று, அவரது உயிரைப் பறிக்கச் சதி செய்தனர். சதித்திட்டத்தை உணர்ந்த ஹர்ஷர், யுவான் சுவாங்கிற்கு ஊறு விளைவிக்க அல்லது தொடமுயன்றால் கூட அவர்களது தலை வெட்டப்படும் என்று அறிவித்தார். பரிசவர்கள் பேரவையை விட்டு ஓடினர். கொலைச் சதித்திட்டத்தின் இலக்கு யுவான் சுவாங் அல்ல, ஹர்ஷரைக் கொல்லவே சதி என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஹர்ஷர் புத்தமதத்தை வெகுவாக ஆதரித்ததால் அவரைக் கொல்லத் " திட்டமிட்டனர். கோபுரத்திலும் கூட்ட அரங்கிலும் தீ விபத்து ஏற்பட்டது. ஹர்ஷரே அத்தீயை அணைத்தார். பின் ஹர்ஷர் கோபுரத்தின் உச்சியிலிருந்து அரங்கின் தோற்றத்தைக் கண்டு திரும்பும்போது, மதவெறியன் ஒருவன் கத்தியுடன் ஹர்ஷரைக் கொல்லப் பாய்ந்தான். மிகத் திறமையுடன் ஹர்ஷர் அவனைப் பிடித்தார். சூழ இருந்த அவர்கள் கொலைகாரனைக் கொல்லத்



துடித்தனர். ஆனால் ஹர்ஷரே ஏதும் நடைபெறாதது போல நடந்து கொண்டார். ஹர்ஷரது பெருந்தன்மையினால் உந்தப்பட்ட கொலையாளி மனம் மாறி உண்மையினை அங்கே உரைத்தான்.

உடனே ஹர்ஷர் 500 பிரமாணர்களை நோக்கிக் கேள்விகளைத் தொடுத்தார். அவர்கள் ஹர்ஷர் முன் வந்து, பந்தலுக்கு எரி அம்புகளை எய்து தீயிட்டு, பின் விளையும் குழப்பத்தில் அரசரைக் கொல்லத் திட்டமிட்டதையும் ஒப்புக் கொண்டனர்."

(அ. கணேசன், ஹர்ஷவர்த்தனர், சென்னை, 1972, பக்கம் 260)

ஹர்ஷர் அவரகளது தலைவரை மட்டும் தண்டித்து மற்றவர்களை நாட்டை விட்டு வெளியேற கட்டளையிட்டார்.

ஹர்ஷரின் காலத்திலேயே (கி.பி. 606-647) பௌத்தர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் பேரவைகளிலும் நாலந்தாவிலும் விவாதங்கள் நடைபெற்றது. அதனால் பகைமைகள் உருவாயின. கொலை சதி, தீயிடல் பழிவாங்கும் முயற்சிகள் தொடர்ந்தன.

**இக்தியாருதீன் முஹம்மது பக்தியார் கில்ஜியின் பீகார் வெற்றி குறித்து சரித்திர ஆசிரியர்கள் கூறுவதென்ன?**

"பக்தியாரின் மகன் இக்தியாருதீன் முஹம்மது கில்ஜியின் பீஹார் படையெடுப்பு 1197ல் நடைபெற்றது. அப்போது பௌத்த மதத்தினர் மேற்கொண்டிருந்த சிலைவணக்கம் படையெடுப்பாளர்களை மிகுந்த எரிச்சலுக்குள்ளாக்கியது. எனவே சிலை வணக்கத்தாரை அவர்கள் விட்டு வைக்கவில்லை. ஒரு பெரிய நூலகம் சிதறியடிக்கப்பட்டது." வெற்றி பெற்றவர்கள் இங்கு கிடைத்த புத்தகங்களைப் பற்றி தெரிந்துகொள்ள ஆசைப்பட்டபோது, அதனை வாசித்துச் சொல்ல ஒருவரும் உயிருடன் இல்லை."

**டாக்டர் ஏ.எல். ஸ்ரீவத்சவா**

தங்களின் சமயக் கோட்பாட்டின் செல்வாக்கிற்குட்பட்டு இடைக்காலத்தை இந்துக்கள் கொடுமையான தொல்லை அனுபவித்த காலம்' என்று தனது வரலாற்று நூல்களில் குறிப்பிடும் டாக்டர் ஏல்.எல். ஸ்ரீவத்சவா தனது இந்திய வரலாறு நூலில் இது குறித்து கூறியிருப்பதாவது:

"பீகார் படையெடுப்பின்போது அதன் பாதுகாப்பிற்காக இருந்த ஆயுதம் தாங்கிய ஒரு சில மனிதர்கள் அப்புறப் படுத்தப்பட்டார்கள். அந்த நகரின் மக்கள் பெரும்பாலும் புத்த பிட்சுகள் அநேகர் வாளுக்கு இரையாக்கப்பட்டு, நகரத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த பெரிய நூலகம் கைப்பற்றப்பட்டது.

இந்த நூலகத்திற்கு ஏற்பட்ட முடி வினைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் வேறுபட்ட



கருத்துக்களைக் கூறுகின்ற னர். அந்த நூலகம் எரிக்கப்பட்டது என்பதற்கு ஆணித்தரமான ஆவணம் எதுவும் இல்லை. ஆனால் அந்நிய இலக்கியத்தின் மீது மரியாதை வைத்திராத துருக்கிய கொள்ளையர்களுக்குப் புத்தகங்கள் மதிப்புடையவை அல்ல. அந்தப் புத்தகங்கள் அழிக்கப்பட்டிருப்ப தற்கு வாய்ப்பு உள்ளது.

(A.L. Srivastava, History of India 1000-1707AD, Agra, 1976, PP41,42)

புத்தகங்கள் கைப்பற்றப்பட்டன. நூல்கள் சிதறடிக்கப்பட்டன. நூல்கள் அழிக்கப்பட்டன. நூலகங்கள் எரிக்கப்பட்டதற்கு ஆணித்தரமான ஆவணம் எதுவும் இல்லை' என்ற செய்திகளைத் தொடர்ந்து நாலந்தாவின் அழிவு இந்தப் படை யெடுப்பினால் மட்டுமா? என்பதை கொஞ்சம் ஆராய்வோம்.

**தட்சசீலம்**

வால்மீகி ராமாயணத்திலே பேசப்பட் டுள்ளது தட்சசீலம். அங்கு அமைக்கப்பட்ட தட்சசீலப் பல்கலைக்கழகம் சட்டக்கல்விக்குப் பெயர் பெற்றது. 'புத்த ஜாதகம்' எனும் நூல் தட்சசீலம் கல்விக் கேந்திரம் என்று குறிப்பிடு கிறது. ஜைனர்களின் முதல் தீர்த்தங்கர அவதா ரமாகிய ரிஷப தேவர் பல ஆயிரம் வருடங் களுக்கு முன்பே அங்கு போய் வந்தார் என்று ஜைனர்கள் கூறுகிறார்கள்.

கி.பி. 1913 முதல் 1934 வரை 21 ஆண்டுகள் அகழ்வு ஆய்வு மேற்கொண்டு தட்சசீலம் பற்றி சர் ஜான் மார்ஷெல் 3 பாகங்களாக விரிவாக அதுபற்றி எழுதியுள்ளார். (Sir John Marshall, Taxila 3 Vols)

யூஹுசி என்பவர்களாலும் ஹுணர்கள் படையெடுப்பாலும் அது அழிந்து போயிற்று (கி.பி. 250) சீனப்பயணி பாஹியான் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் அதன் பாழடைந்த இடத்தைக் கண்டார் என்று கூறப்படுகின்றது.

**பால வம்சத்து அரசர்கள்**

நாலந்தா பல்கலைக்கழகத்தினை ஆதரித்து வந்த பீகார் தேசத்துப் பால வமிச அரசர்கள், தங்களது ஆதரவை நாலந்தா பல்கலைக் கழகத் திற்கு அருகில் அதற்கு எதிர்ப்பாகக் கிளம்பிய மற்றொரு பல்கலைக் கழகத்திற்கு மாற்றி விட்டதை சரித்திரத்தின் பக்கங்கள் சாட்சிய மளிக்கின்றன.

**விக்கிரமசீலம்**

கி.பி. 8ஆம் நூற்றாண்டில் பீகாரில் தர்மபாலன் எனும் அரசன் விக்கிரமசீலம் பல்கலைக் கழகத்தை தோற்றுவித்தான்.

அதன்பின் ஆட்சிக்குவந்த ராம பாலன் 'ஜகத்தாலம்' என்னும் பல்கலைக் கழகத்தை உருவாக்கினான்.


vaigarai velicham official



அதனைத் தொடர்ந்து கோபாலன் அல்லது லோகபாலன் என்பவன் ஒதண்டபுரி மடத்தை (கல்விக்கூடத்தை) நிறுவினான். கி.பி. 8ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை கிழக்கிந்தியாவில் இவைகள் கல்விக் கேந்திரங் களாய் விளங்கின.

விக்கிரமசீலம் பல்கலைக்கழகத்தில் அதற்கு முன்பு வேறு எங்கும் இல்லாத புதுமுறைகைள் கையாளப்பட்டது. அங்கு படித்துத் தேறியவர் களுக்குப் பட்டங்களை வழங்குவதற்காக அரசர் அழைக்கப்பட்டார், மாணவர்களுக்கு அரசரே பட்டங்களை வழங்கினார். தட்ச சீலத் திலும் நாலந்தாவிலும் இல்லாத ஒன்று இம்முறையாகும். அதாவது நாலந்தாவை விட விக்கிரமசீலம் குறைந்ததன்று என்பதை காட்டிக் கொள்வதற்காக இவ்வழக்கம் ஏற்பட்டது.

நாலந்தா பல்கலைக்கழத்தின் வீழ்ச்சிக் காலத்தில் விக்கிரமசீலம் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சி காலத்தில் மன்னர்களது ஆதரவும் அரசியல் செல்வாக்கும் விக்கிரமசீலத்திற்கு வந்த வேளையில், இங்கிருந்துதான் புரோகி தர்கள், ஆசிரியர்கள் நாலந்தாவிற்கு அனுப்பப் பட்டார்கள். சில பேராசிரியர்கள் இரு பல்கலைக் கழகத்திலும் பணியாற்றினார்கள். இவைகள் வரலாற்றின் பக்கங்களில் இருந்து மறைக்கவோ, மறுக்கவோ எவராலும் இயலாது.

**அரசாங்க பல்கலைக்கழகம்**

விக்கிரமசீல பல்கலைக்கழகம் அப்போதைய அரசாங்கத்தின் முழு ஆதரவை முற்றிலுமாகப் பெற்றிருந்தது. அது அரசாங்கப் பல்கலைக் கழகம் (Royal University of Vikramasila) என்றே வழங்கப்பட்டது.

விக்கிரமசீல பல்கலைக்கழகத்தில் அரசரே நேரில் வந்து பட்டம் வழங்குகிறார். அரசாங்கப் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்படுகிறது. இங்கிருந்துதான் நாலந்தாவிற்கு ஆசிரியர்களே அனுப்பப்பட்டனர். இவைகளிலிருந்து நாலந்தாவின் வீழ்ச்சியினை எவரும் எளிதில் உணர்ந்துகொள்ள முடியும்.

**சவால் விடும் விக்கிரமசீலம்**

வங்காள அறிஞர் R.C. மசூம்தர் டாக்கா பல்கலைக்கழக துணைவேந்தர். வாரணாசி ஹிந்துப் பல்கலைக்கழக முதல், அமெரிக்க சிகாகோ பல்கலைக் கழகத்திற்கும் பென்சில் வேனியாவிலும்

விஜயம் செய்த வரலாற்று அறிஞர் தனது 'பழங்கால இந்தியா' என்ற நூலில் (டில்லி 1971, பக்கம் 268ல்) கூறுகிறார் :

"பல அரசர்கள் தோற்றுவித்த விக்கிரமசீல பல்கலைக்கழகம் நாலந்தா பல்கலைக்கழகத்திற்கு ஏறத்தாழ சமமாக சவால்விடும் நிலைக்கு எழுந்தது என்கிறார். நாடெங்கும் பல பல்கலைக் கழகங்கள் தோன்றின அத்தோடு பல வமிசத்து அரசர்கள் தங்களது ஆதரவை விக்கிரமசீலப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றிவிட்டார்கள். அது நாலந்தா மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது.

ஆசிரியர்களையும் நியமித்து அனுப் பியது. நாலந்தாவின் புகழ்மங்கியது. இந்தியாவின் வைதீக மறுமலர்ச்சி அப்போது உண்டானது. புத்த சமயப் பிரச்சாரம் அதிக அளவில் நடைபெற முடியாமல் போனது. நாலந்தா இவ்வாறு அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

**பிராமணர்கள் வைத்த தீ**

இருபதாம் நூற்றாண்டு தமிழ் சான்றோர் களில் தனியிடம் பெற்றுச் சிறந்தவர் பேராசிரியர் செந்நாப்புலவர் ஆ. கார்மேகக்கோனார். (இவரது பெயரில்தான் 'கோனார்' தமிழ் உரை என்று தமிழ் வழிகாட்டி நூல்கள் வெளிவருகிறது) ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும் பதிப்பித்தவர் இவர். இவர் பதிப்பித்த 'பண்டை இந்தியப் பல்கலைக் கழகங்கள்' எனும் நூல், மதுரைக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் ரா. கிருஷ்ணமூர்த்தியால் எழுதப்பட்டு, 1957ல் 118 பக்கங்களில் வெளிவந்தது. அந்த நூலின் பக்கம் 52ல் நாலந்தாவின் அழிவு குறித்து குறிப்பிடும்போது...



"நாலந்தா மாணவர் ஒருவரால் தோற்கடிக் கப்பட்ட இரண்டு வைதீகப் பிராமணர்கள், நாலந்தா மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள அதைத் தீக்கிரை யாக்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது - என்று குறிப்பிடுகிறார்.

**D.D.கோசம்பி**

'பண்டைய பண்பாடு நாகரீகம் என்பன வற்றின் விளக்கம்' எனும் நூலில் (NEW DELHI. 1976. P. 180-181) மார்க்சிய வரலாற்றாசிரியர் அபூர்வமான அறிஞர் D.D.கோசம்பி (KOSAMBI) கூறுவது நாலாந்தாவிற்கு அருகில் புத்த வஹாரைகள் கட்டப்பட்டது. 'வஹரை'கள் அமைந்த இடமாதலால், அந்த நாட்டிற்கு 'விஹார்' என்ற பெயர் ஏற்பட்டு அதுதான் (பீஹார்) என்றாயிற்று.

கி.பி. 150ல் ஹிந்து அரசர் கோவிந்த சந்திரகாகதேவாலா (Govinda Candra Gahada vala) அவரது துணைவியார் பௌத்த மதத்தைச் சேர்ந்த அரசியார்; இவர் காலத்தில் இங்கு நிறைய மானியங்கள் அளிக்கப்பட்டது. இங்குள்ள விஹாரைகள் தான் போரின்போது அழிக்கப்பட்டது.

**உல்ஸ்லி ஹைக்**

கேம்பிரிட்ஜ் இந்திய வரலாற்றில் மூன்றாவது தொகுதியில் லெப்டினென்ட் கர்னர் உல்ஸ்லி ஹைக் (Lt. colonel, Sir Wolesley Haig, 1928) பக்கம் 42ல் கூறியிருப்பதாவது:

"மாலிக் இஸாமுதீன் அகுல்பக் அயோத் தியில் நிலைகொண்ட முஸ்லிம் தளபதி. அவரது உற்சாகப்படுத்தலினால் இக்தியாருதீன் முஹமது கில்ஜி பீகாருக்குள் படையெடுத்துச் சென்றார். உதண்டபுரி சென்று மடத்தில் உள்ள புத்த பிட்சுகளைக் கொன்றார். அந்த மடத்திலிருந்த நூலகத்தின் பொருட்கள் உட்பட கொள்ளைப் பொருட்களுடன் திரும்பினார்.

கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு தரும் செய்தி இது.

அலகாபாத் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய டாக்டர் ஈஸ்வரி பிரசாத் அங்கு வரலாற்றுத்துறைப் பேராசிரியராகவும் தலைவராகவும் திகழ்ந்தவர். பல்வேறு இஸ்லாமிய வரலாற்று நூல்களை எழுதியுள்ளார்.

அவர் தனது 'History of Muslim Rule' என்ற நூலில் (1931) பக்கம் 63ல் கூறுவ தாவது:

'அதிக அளவிலான புத்தகங்கள் கைப்பற்றப் பட்டு படையெடுத்தவர்களால் சிதறியடிக்கப் பட்டது.'

பேராசிரியர் ஈஸ்வரி பிரசாத் தனது மத்திய கால இந்தியா என்ற நூலில் (அலகாபாத் 1966) பக்கம் 140ல் தெரிவித் துள்ள செய்தி:

படையெடுப்பின் போது அழிக்கப்பட்டது சந்தேகத்திற்கு இடமில்லாமல் பிற்காலத்திய புத்தமதந்தான். அது மத நிறுவனரின் (புத்தரின்) மாபெரும் கொள்கைகளை இழந்து சிலை வணக்கத்தையும் புத்தமதத்தின் உண்மையான தன்மைக்கு மாறான சில கொள்கைகளையும் ஒத்துக் கொண்டிருந்தது."

'நாலந்தா மாணவர் ஒருவரால் தோற்கடிக் கப்பட்ட இரண்டு வைதீகப் பிராமணர்கள், நாலந்தா மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள அதைத் தீக்கிரையாக்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது' என்று குறிப்பிடுகிறார்.

கட்டுரையின் துவக்கத்திலேயே நாலந்தாவில் வாதப்பிரதிவாதங்கள் எழுந்து, பகைமையையும் குரோதத்தை யும் வளர்த்த விவரங்களை இங்கே எண்ணிப்பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஆக, நாலந்தா, மன்னர் ஆதரவை இழந்தது; மற்ற பல்கலைக்கழகங்களும் தோன்றி உட்பகையால் வீழ்த்தப்பட்டது. என்பனவே வரலாற்றில் நாலந்தா குறித்த வெளிச்சத்திற்கு வராத உண்மைகள். அதுவே வெளிச்சத்திற்கு வரவேண்டிய உண்மைகளும் ஆகும்.

**- செ.திவான்**



vaigarai velicham official

## இப்பொழுது பரபரப்பான விற்பனையில்







நூலைப் பெற்றிட : 8148129887, 74012 13394





*அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.*

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887



மௌலானா

# ரூமி (ரஹ்) அவர்களின் தத்துவக் கருத்து...



**பீ.எம். அப்துல் கரீம்**
(ஆலோசனைக்குழுத் தலைவர்
இ.இ.மு.சங்கம், குளச்சல்)

**வான இயல்** நிபுணர்களின் கருவியைப் போன்றவன் மனிதன். அந்தக் கருவியின் துணை கொண்டு விண்ணகத்தை ஆராய முடியும். இதே போன்று மனிதனை மையமாக கொண்டு இறைவனைத் தெரிந்து கொள்ளலாம்.

**மௌலானா ரூமி (ரஹ்)**

பாரசீகத்தில் ஹிஜ்ரி 604-ல் பஹாவுத்தீன் என்ற பக்திமானுக்கு மகனாக முகம்மது என்ற இயற்பெயரும் ஜலாலுத்தீன் என்ற பட்ட பெயருக்கும் சொந்தக்காரரர். பெருமானாரின் உற்றத் தோழர் அபூபக்கர் ரலியின் ஒன்பதாவது தலைமுறையில் பிறந்தவர்கள். மஸ்னவிஷரீபு பாரசீக இலக்கியம். பல தத்துவ கருத்துக்களை உள்ளடக்கிய நூல்.

இருக் மஸ்னவிஷரீபில் அரை குறையாக படித்தவர்கள் அதிமேதாவியாக நடிப்பதை போலி அறிஞராக வேடம் போடுவதை ஓர் கதை மூலம் மக்களுக்குச் சொல்கிறார்கள். ஓர் ஈ தன்னைப் பற்றி பெரிதாக கற்பனை செய்து கொண்டது.

என்னைப் பற்றியாரும் தவறாக நினைக்க வேண்டாம். எனக்கு பல தகுதிகள் உள்ளது. ஆனைராஞ்சிப் பறவை இருந்ததாக சொல் வார்கள். இக்கால ஆனைராஞ்சி பறவை நான் தான் ஒரு நாள் பள்ளம் ஒன்றில் தேங்கி நிற்கும் கழுதையின் மூத்திரத்தில் ஓர் துரும்பு காற்றில் அங்குமிங்கும் அசைந்து கொண்டிருந்தது. அந்த துரும்பின் மீது அமர்ந்த ஈ தேங்கி கிடந்த கழுதையின் மூத்திரத்தை கடலாகவும் மிதந்து கொண்டிருந்த சிறு துரும்பை பெரும் கப்பலாகவும் தன்னை திறமையான மாலுமியா கவும் காற்றில் அந்த துரும்பு அசைவதை கப்பலின் கனவே ஓட்டமாகவும் கற்பனை செய்து கொண்டது.

என்ன வேகம் யாரெல்லாமோ கப்பல் ஓட்டுகிறார்களாமே! நான் ஓட்டுவதைப் போல யாரால் கப்பல் ஓட்ட முடியும். பிரமை கொண்டிருந்தது அந்த ஈ. அந்த அளவு மமதை. இந்த ஈ கற்பனை செய்ததைப் போலவே வீண் பெருமை, கௌரவம், மமதை கொண்டு அலையும் அரைவேக்காட்டு அறிஞர்களும் கழுதை மூத்திரத்தில் கப்பல் ஓட்டிய ஈயைப் போன்ற ஈனமானவர்கள் என்பதை மஸ்னவி சரீபில் சிறு உயிரின் உதாரணத்தை மேற்கோள் காண்பித்து நம்மை மமதையிலின்றி வாழச் சொல்கிறார் மௌலானா ரூமி (ரஹ்).

நபிபிரான் கட்டளையும் இறை கட்டளையும் இஸ்லாமியர் கடைபிடித்து ஒழுக வேண்டும். நபிகள் நாயகம் தன் இஷ்டப்பட கூறுவதில்லை. *3:53* என்ற மறை வசனம் பெருமானாரின்


vaigarai velicham official

பொன்மொழியின் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது. ஹதீதுகளை மறுத்து குர்ஆன் ஒன்றே வாழ போதும் என வாதிக்கும் ஒரு கூட்டமும் இன்று உலகில் காணப்படுகிறது. ஹதீதுகளை மறுப்போர்

மாறுகண் உடையவர்கள் என்பதை மௌலானா ஜலாலுத்தீன் ரூமி ரஹீமதுல்லாஹ் மஸ்னவிஷர்பில் அழகிய ஓர் உவமானம் முலம் விளக்குகிறார்கள். ஹதீது மறுப்போர் மாறுகண் உடையோர் என்பது அன்னார் கருத்து.

ஓர் ஊரில் மாறு கண்ணுடையவன் ஒருவன் இருந்தான் அவன் கண்ணின் கோளாறு. எப் பொருளும் இரண்டாக காணும் இவன் ஓர் ஆசிரியரிடம் கல்வி கற்று வந்தான். அவர் ஒரு நாள் மாறுகண் மாணவனிடம் நீ என் வீட்டில் சென்று பீரோவிலிருக்கும் கண் கண்ணாடியை எடுத்துவா என்றார்கள். இவன் ஆசிரியர் வீடு சென்று பீரோவில் கண்ணாடியை பார்க்கும் பொழுது இரண்டு கண்ணாடி இருப்பது தெரிகிறது. அவன் ஆசிரியரிடம் வந்து ஆசிரியரே பீரோவில் இரு கண்ணாடி இருக்கிறது இதில் எந்தக் கண்ணாடியை எடுத்து வர என வினவினான். ஒரு கண்ணாடி தானே பீரோவில் இருக்க வேண்டும். நீ இரண்டு கண்ணாடியிருப்பதாக கூறுகிறாய்.

ஆசிரியர் சொன்னார் இரண்டு கண்ணாடி யிருந்தால் ஒரு கண்ணாடியை உடை த்துவிடு, அவன் பீரோவிலிருந்த கண்ணாடியை எடுத்து உடைத்தான். உடைத்தபின் பீரோவை பார்த்த போது பீரோ கண்ணாடியின்றி காலியாக இருந்தது. என்ன ஆச்சரியம் இது இந்த விபரத்தைச் சொல்ல ஆசிரியரிடம் சென்றான்.

ஆசிரியரிடம் நடந்தவற்றைச் சொன்னான். ஆசிரியர் மாறுகண் மடையா என் பீரோவில் இருந்தது ஒரு கண்ணாடி. ஆனால் உன் மாறுகண் இரண்டாக காண்பித்துவிட்டது. நீ உடைத்தது என் கண்ணாடியை என்றார்.

எதையும் இரட்டையாக பார்க்கும்மாறு கண்ணைப் போன்றவர்கள் அல்லாஹ்வின் கட்டளையையும் அவன் ரசூலின் கட்டளை களையும் இரண்டும் வேறென வாதிக்கும் கூட்டம் என்பதை மௌலானா ரூமி அவர்கள் எளிய ஓர் கதையை உவமையாக சொல்லி விளங்க வைக்கிறார்கள். மஸ்னவி சரீபில் ஏராளமான ஞான கருத்துக்களை பாரசீக மொழியில் மௌலான ரூமி மக்களுக்கு விளங்க வைத்துள்ளார்கள்.

இந்தியா வந்த பாக். அதிபர் முசாபருடன் உடன் வந்த அவர் மனைவி நம் நாட்டின் அன்றைய ஜனாதிபதி அப்துல்கலாமிடம் உங்களை ஒரு விஞ்ஞானியா தூண்டியது எது? என்று கேட்டபோது பாரசீக கவிஞர் மௌலானா ரூமியின் பாரசீக கவிதை எனச் சொல்லி வண்டு எந்த நோக்கத்திற்காக இறைவனால் படைக்கப் பட்டதோ அதை ஒழுங்காக செய்கிறது. ஆனால் மனிதன் எந்தக் குறிக்கோலுக்காக இறைவன் படைத்தானோ அந்த இலட்சியத்தையடைய வாழ்நாள் பூராவும் மனிதன் போராட வேண்டிய வனாக உள்ளான் என்ற கவிதை தான் என்னை விஞ்ஞானி ஆக தூண்டியதென்றார் என்ற செய்தி பத்திரிக்கைகளில் வந்தது. மௌலானா ரூமியின் கருத்தான மிக்க பாரசீக கவிதைகள் என்றும் உயிரோட்டம் உடையது காலத்தால் அழியாதது.



# உலக வரலாற்றில் அவுரங்கசீப்!

## இதுவரை அறியப்படாத புதிய தகவல்கள்...



**உலக வரலாற்றில்** சுமார் 1400 வருடங்களாக சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான பெரும் காரணிகளாக விளங்கியவர்கள் முஸ்லிம்கள். இதில், இந்திய துணைக்கண்ட வரலாறில் சுமார் 800 வருடங்கள் அவர்கள் ஆட்சியில் இருந்துள்ளனர். ஆனால், சுதந்திரம் அடைந்து கடந்த 75 ஆண்டுகளில் படிப்படியாக ஓரங்கட்டப்பட்டு மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இத்தனை ஆண்டு காலம் மத வேறுபாடின்றி ஆட்சி செய்தவர்களாகிய இன்றைய தலைமுறை முஸ்லிம்களின் சமூக பொருளாதாரம் பின்னடைந்து இருப்பது வருந்தத்தக்கது. இதன் வரலாற்று பின்னணி ஆராயப்பட வேண்டியதாகும்.

வரலாற்று காலந்தொட்டு தென்னிந்திய கடற்கரை ஓரங்களில் வியாபாரம் செய்து வந்த அரபிகள் கி.பி 600களுக்கு பின்னர் முஸ்லிம்களாக அறியப்பட்டனர். இவர்கள் வணிக நோக்கத்துக்காக தென் இந்திய தீபகற்பத்தின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரை ஓரங்களில் வணிக குடியேற்றங்களை நிறுவியவர்கள். இந்த வணிகத்தில் குதிரை ஏற்றுமதி, குதிரை போர் பயிற்சி, பராமரிப்பு ஆகியன முக்கிய பங்காற்றின.

இன்றுபோல், அன்றைய காலகட்டத்தில் நவீன இந்திய அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் டில்லியை தலைநகரமாக கொண்ட ஒற்றை ஆட்சியாளர் மற்றும் ஆட்சி முறை இல்லை. சிறுசிறு நாடுகளாக பிரிந்தும் உலகின் பிற பகுதிகளை போன்று இங்கும் தனித்தனி இனங்கள் ஆட்சி செய்து வந்தன. இந்த நாடுகளுக்கு அவற்றின் எல்லை பாதுகாப்பை உறுதி செய்ய ராணுவத்திற்கு குதிரை வியாபாரம் செய்து வந்தனர் அரபு முஸ்லிம்கள். இவர்களின் வணிக தொடர்பால், இங்குள்ளவர்கள் இவர்களின் நடத்தை மற்றும் மத நம்பிக்கையால் ஈர்க்கப்பட்டு முஸ்லிம்களாக மாறினர். திருமண உறவுகளாலும் இவர்கள் முஸ்லிம்களாயினர். சத்தியத்தை ஏற்ற இப்புதியவர்களான மண்ணின் மைந்தர்கள் காலப்போக்கில் எண்ணிக்கையில் உயர்ந்தனர். இந்த முஸ்லிம்களின் வாழ்வும் வியாபாரமும் அமைதியாக கழிந்து வந்தது. இந்நாடுகளை பாதுகாக்கும் ராணுவ நடவடிக்கைகளிலும் கலந்து கொண்டனர்.

இந்த நேரத்தில், கி.பி.1492-ல் வாஸ்கோட காமா என்ற இன்றைய போர்ச்சுக்கல் நாட்டை சேர்ந்த வெள்ளை கிறிஸ்தவர் சில திட்டங்களுடன் கடல் வழி பயணத்தை மேற்கொண்டார். இயல்பில் இவர் கடற்கொள்ளையர். இந்த திறமையை கத்தோலிக்க திருச்சபையின் கட்டுப்பாட்டில் இருந்த மேற்கு ஐரோப்பா நாடுகள் பயன்படுத்திக்கொண்டன. வாஸ்கோட காமா வியாபார நோக்கில் வணிக பொருட்களுடன் கோழிக்கோட்டில் இறங்கவில்லை.

வணிக பொருட்களுக்கு பதிலாக பிரம்மாண்ட பீரங்கிகளை கப்பலில் ஏற்றிக்கொண்டு அரபிக்கடலோரம் கரையிறங்கினார். ஐரோப்பிய தேவாலய ஆட்சியாளர்கள் நம்பிக்கொண்டிருந்த படைபலமிக்க, ஆசியாவில் வசித்து வருவதாக நம்பப்பட்ட பிரிஸ்டர் ஜானை (Prester John) சந்திப்பதற்காகவே


vaigarai velicham official







இவரை அனுப்பி வைத்தனர். தட்டுத் தடுமாறி ஆப்பிரிக்கா கண்டத்தை சுற்றி அரேபிய நிலப் பகுதிக்கு வந்தடைந்த வாஸ்கோடகாமாவுக்கு அதற்கு மேல் பயணிக்க வழி தெரியவில்லை. தான் எதிர்பார்த்த கிறிஸ்தவ மன்னன் பிரிஸ்டர் ஜானின் ஆட்சிக்கு பதிலாக தான் பயணித்த கடலோர பகுதிகளில் அநேக முஸ்லிம் ஆட்சி மற்றும் முஸ்லிம் குடியிருப்புகளை கண்டதால் வெறுப்படைந்தார். சில இடங்களில் பீரங்கி குண்டுகளை வீசி படுகொலையை நடத்தி விட்டு பயணித்தார். மிளகு கிடைக்கும் பகுதியை பற்றிய தகவல்களை சில அரபு வணிகர்களிடம் பெற்று கொண்டவர், இதற்காக சில முஸ்லிம் மாலுமிகளை கடத்தி வந்து மிளகு விளையும் பகுதியைதான் அடைவதற்கு வழிகாட்டும் படி அவர்களை சித்திரவதை செய்தான். அப்பகுதி நிச்சயமாக செல்வ வளமுள்ள பூமியாக இருக்கும் என்றும் அதுவே பிரிஸ்டர் ஜானின் ஆட்சி பகுதியாக இருக்க கூடும் என்ற எண்ணத்தில் இத்திட்டத்தை தீட்டினான். ஒரே கல்லில் இரண்டு மாங்காய். ஒன்று பிரிஸ்டர் ஜான், மற்றொன்று மிளகு.

சித்திரவதைக்கு உள்ளான அரபு மாலுமிகள், வலியை தாங்க முடியாமல் கோழிக்கோடுக்கு வழிகாட்டினர். ஆனால் கரையிறங்கியதும் அவர்கள் அனைவரையும் ஈவிரக்கமின்றி கொலை செய்தான். அவன் பீரங்கியுடன் (GUN BOAT POLICY) புகுந்த பின்னரே இந்திய துணைக்கண்டத்தின் அமைதியும், உலக அமைதியும் சீர்குலைய தொடங்கியது. அதாவது, சிலுவை யுத்த எண்ணத்தை சுமந்து வந்த கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் பிடியில் உலகின் பல நாடுகள் சிக்க தொடங்கின. இவர்களின் பிடியில் சிக்கிய காலனி நாடுகளின் சமூக, கலாசார, பொருளாதார, அரசியல், மொழி, பண்பாடு பழக்க வழக்கங்கள் அனைத்தையும் இவர்கள் தொகுக்க தொடங்கினர். இதுபோன்ற தொகுப்புகள் தான் வரலாறுக்கு ஆதார நூல் எனப்படுகிறது.

இந்த வரலாற்று தொகுப்பில் மிக சிலவற்றை தவிர மற்ற அனைத்திலும் முஸ்லிம்களை எதிரிகளாக சித்தரிக்கும் விதத்தில் கருத்துக்களை இவர்கள் பதிவு செய்தனர். வரலாற்று உண்மைகளையும், முஸ்லிம்களின் பெருந்தன்மையையும் ஒரு சேர பதிவு செய்த சிலரின் மூல ஆதார தொகுப்புகள் வெளியிடப்பட்டாலும் அவை முன்னிலைப்படுத்தப்படுவதில்லை. (Travels in the Mugal Empire by Francois Bernier) ஆனால், எதிர்மறையாக மட்டுமே தொகுக்கப்பட்டவற்றில் கூறப்படும் சம்பவங்கள் உண்மையா, பொய்யா என்பதை ஆராயாமல் அதில் உள்ளவற்றை அப்படியே உள்வாங்கியது இந்திய முஸ்லிம் வெறுப்பரசியல்.

அதன்படி, வகுப்புவாத அடிப்படையில் உண்மைக்கு புறம்பான மூல ஆதாரங்களை கொண்ட வகுப்புவாத பாடத்திட்டங்களே மாணவ, மாணவிகளுக்கு பயிற்றுவிக்கப்படுகிறது. இது பிஞ்சு மனதில் நஞ்சு விதைப்பது போல, தவறாகவே சொல்லித்தரப்படுகிறது.

இவ்வாறான கல்வித்திட்டத்தில் வகுப்புவாத வரலாறு தெரிந்தோ தெரியாமலோ சொல்லித் தரப்பட்டதால், தனியார் பள்ளிகளுடன், அரசுப்பள்ளிகளின் மூலமாகவும் நச்சு சிந்தனை பரவியுள்ளது. இந்த அரசுப்பள்ளிகளில் படித்த குழந்தைகள் முஸ்லிம் வெறுப்பு வரலாறை படித்து ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கில் வெளியேறுகின்றனர். இவ்வாறு உருவாகிவரும் தலைமுறைகளிடம் உண்மையான வரலாற்றை எடுத்து சொல்லும் மூல ஆதாரங்களை எடுத்து காட்டி பேசினாலும் அதனை மறுத்து வன்முறை செய்யும் நிலை உருவாகியுள்ளது.

இன்று பொய்யான ஆதாரமில்லாத புனைவுகளை வரலாறாக கட்டமைப்பது ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தவாதிகளால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக அவர்கள் கடுமையாக உழைக்கவும் செய்கிறார்கள். அவர்களின் ஒரே நோக்கம் ஆரியர்கள் இந்தியாவின் வந்தேறிகள் இல்லை என்பதை எப்பாடுபட்டாவது நிரூபித்து விட வேண்டும். அவர்களை இந்தியாவின் பூர்வகுடிகள் என்று நிரூபிக்க வேண்டும். இதற்கான கால இடைவெளிக்காகவும் (மகாபாரதம் இந்திய துணைக் கண்டத்தில் நடந்ததாக கருதி மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆராய்ச்சியை நிரூபிக்க தேவையான கால கட்டம்), இந்திய முஸ்லிம்களின் வரலாறை பற்றிய பொய் பிரசாரம் ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகிறது. தற்போது தனிப்பெரும்பான்மை என்பதால் வரலாறை பல்வேறு வழிகளிலும் திரித்து ஆவணப்படுத்த முயற்சி செய்து வருகின்றனர். அதாவது, பொதுமக்களின் கவனத்தை முஸ்லிம் மன்னர்களின் பக்கம் திசைதிருப்பி, மறைமுக ஆரிய செயல்திட்டத்தை பின்வாசல் வழியாக நிரூபிக்க முனைகின்றனர்.

இதில் முதற்கட்டமாக முஸ்லிம் மன்னர்களை பற்றிய பொய்பிரசாரத்தில் அவர்கள் அதிகம் கவனம் செலுத்துவது ஆலம்கீர் என்றழைக்கப்படும் முகலாய மன்னர் அவுரங்கசீப். அவரைப்பற்றி எதிர்மறையாக ஆராய்ச்சி செய்த ஜாதுநாத் சர்க்கார் தனது ஆய்வில் பல்வேறு மோசடிகளை, தகிடுதத்தங்களை செய்திருப்பதை வரலாற்று ஆய்வாளர்கள் தோலுரித்து காட்டிவிட்டனர்.

தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியில் சமூக வலைத்தளங்கள் அவர்களின் பொய்ப் பிரசாரத்துக்கு அடித்தளமாக உள்ளது. இதற்காக பல்வேறு போலி ஐ.டி.க்கள் வழியாக முஸ்லிம்களுக்கு எதிராகவும், அவர்களின் வரலாறுக்கு எதிரான பொய்யான தகவல்களை பரப்பி வருவது போன்ற பணிகளை கனகச்சிதமாக செய்து வருகின்றனர். இதன் ஒருபகுதியாக யூடியூபில் கீர்த்தி வரலாறு (@keerthihistory) என்ற பக்கம் தொடங்கப்பட்டு, பொய்களை மூலதனமாக கொண்டு முஸ்லிம் மன்னர்களுக்கு எதிரான பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது.

ஆரியத்தை மையப்படுத்தி கீர்த்தி என்ற பெண் தனது யூடியூப் சேனலில் புனைவுகளை வரலாறாக சித்தரித்து வருகிறார். வரலாறை அதற்கான விதிகளோடும் நடுநிலை கண்ணோட்டத்தோடும் ஆய்வு செய்வதே உண்மையான வரலாற்று ஆய்வாளர்களின் பணியாகும். ஆனால், இவர் அவதூறு மற்றும் பொய்யான தகவலை பரப்ப வேண்டும் என்பதற்காகவே வரலாறு என்ற பெயரில் தனக்கு தெரிந்த தகவல்களை வரலாறாக பேசி வருகிறார்.

சமீபத்தில் அவர் பேசிய அவுரங்கசீப் குறித்த வரலாற்று பதிவு அரைகுறை தகவல்களுடன் வரலாற்று ஆதாரங்களை மேற்கோள் காட்டாமல் பேசப்பட்டுள்ளது. சுமார் 6 நிமிடம் ஓடக்கூடிய இந்த பதிவில் அவர் முக்கிய சான்றாக குறிப்பிடுவது தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (NCERT) தந்த தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட (RTI) பதில்தான்.

அந்த யூடியூப் பக்கத்தில் (NCERT Books are telling fake informations,why? Keerthi History #shorts#history) அவர் முன்வைக்கும் கருத்து, அவுரங்கசீப் கோவில்களை இடித்தவர். கொடூர மனம் கொண்டவர் என்பது தான்.

என்.சி.இ.ஆர்.டி. யால் தயாரிக்கப்பட்டு சி.பி.எஸ்.இ. (CBSE) பள்ளிகளில் 12-ம் வகுப்பு





NATIONAL COUNCIL OF EDUC
RESEARCH AND TRAINING


vaigarai velicham official




வரலாறு பாடப் புத்தகத்தில் (Themes in Indian History, Part-2, Theme Nine, page 234) தீம்ஸ் இன் இந்தியன் ஹிஸ்டரி பாகம்-2 பாட புத்தகத்தில் Kings and Chronicle என்ற 30 பக்கங்கள் கொண்ட பாடம் உள்ளது. இதில் The ideal Kingdom என்ற உட்தலைப்பில் பக்கம் 234-ல் 2-வது பாராவில் வழிபாட்டு தலங்களுக்கு அனைத்து முகலாய மன்னர்களும் மானியங்கள் கொடுத்துள்ளனர் என்ற தகவல் உள்ளது. அதாவது, கோவில்களை பராமரிக்கவும், பூஜை புனஸ்காரங்கள் செய்யவும் நிதி உதவி அளித்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பாராவை மறுத்து பேசும்போது, மாமன்னர் அவுரங்கசீபை குறை சொல்கிறார் கீர்த்தி.

பொதுவாக வரலாற்றை முந்தைய கால கட்டத்தில் ஆய்வு செய்தவர்கள் தங்களுக்கு அதுவரை கிடைத்த தரவுகளின் அடிப்படையில் எழுதிய வரலாற்று தொகுப்புகளை, பிந்தைய தலைமுறை ஆராய்ச்சியாளர்கள் கண்மூடித் தனமாக பின்பற்றும் வழக்கம் நமது நாட்டில் உள்ளது. புதிய ஆய்வு தகவல்கள், ஆதாரங்கள் ஆகியவற்றை பழைய தரவுகளுடன் ஒப்பிட்டு பார்ப்பதில்லை. முரண்பாடுகளையும், பொய்களையும் கேள்விக்கு உட்படுத்தும் புதிய ஆய்வுகளின் உண்மைகள் சமூகத்தின் அமைதியை உறுதிப்படுத்தும் என்பதை மறந்துவிடுகின்றனர்.

இதுபோன்ற அணுகுமுறைகளுக்கு சிறந்த உதாரணங்களும் உள்ளன. அவற்றில், தமிழகத்தில் சோழர்களின் வரலாற்றை ஆய்வு செய்த கே.ஏ.நீலகண்டசாஸ்திரியின், ஆய்வில் முரண்படும் தகவல்களை கேள்வியெழுப்ப இன்று வரை எவரும் முன்வருவதில்லை. பொது மேடைகளில் விமர்சனம் செய்து விட்டு சென்று விடுகின்றனர். அத்துடன் தங்களது எதிர்ப்பையும் அல்லது ஆதாரங்களையும் நிறுத்திக்கொள் கின்றனர்.

அதேபோல, வடஇந்திய வரலாற்றாசிரியர் களில் ஜாதுநாத் சர்க்கார் (A Short History of Aurangzib, 1618-1707,By Sir Jadunath Sarkar) மாமன்னர் அவுரங்கசீப் குறித்து தெரிவித்த ஆய்வு தகவல்களில் உள்ள முரண்பாடுகள் குறித்து எவரும் கேள்வியெழுப்புவதில்லை.

முதன்முறையாக தமிழகத்தை சேர்ந்த வரலாற்றாசிரியர் செ.திவான் தனது அவுரங்கசீப் புத்தகத்தில் (வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப், ஆசிரியர் செ.திவான், 1999) ஜாதுநாத் சர்க்காரின் ஆராய்ச்சி முரண்பாடுகளை பட்டியலிட்டுள்ளார். அத்துடன் அவர் விட்டு விடவில்லை. முரண்பட்ட தகவல்களை உண்மையை கொண்டு தோலுரித்தும் காட்டி யுள்ளார். இவையனைத்துக்கும் ஆதாரங்களை வெளியிட்டுள்ளார். துருதிஷ்டவசமாக அவரது புத்தகம், ஆய்வு கண்ணோட்டத்தில் எழுதப் பட்டுள்ளதால் பொதுவெளியில் பரவலாக பேசப்படுவதில்லை. இந்த புத்தகம் இந்தி ,ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடாமல் விடப்பட்டுள்ளது.

கீர்த்தி குறிப்பிட்டு பேசும் RTI தகவலானது, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் கடந்த 7.11.2020-ல் ஷவாஸ் வர்மா என்பவர் கேட்டி ருந்த கேள்வியாகும். இதற்கு NCERT தன்னிடம் எந்த தகவலும் இல்லை என்று 18.11.2020-ல் பதிலளித்துள்ளதாக ஒரு கடிதத்தை வெளியிடு கிறார்.

அந்த கடிதத்தில், அவுரங்கசீப் கோவில் களுக்கு மானியம் கொடுத்தார் என்பதற்கான

ஆதாரங்கள் என்ன?. எந்த ஆதாரத்தை வைத்து என்சிஇஆர்டி இந்த தகவலை குறிப்பிடுகிறது? என்ற கேள்வியும், அவுரங்கசீப் மற்றும் ஷாஜ கானால் புனரமைக்கப்பட்ட கோவில்களின் எண்ணிக்கை எத்தனை? என 2 கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

அதற்கு தங்களிடம் அல்லது துறையில் தகவல் எதுவும் இல்லை என்று NCERT தனது பதிலில் தெரிவித்துள்ளதாக காணொளியில் ஆதாரத்தை வெளியிட்டுள்ளார். இதே பதிலை தபிந்தர் சிங் என்பவருக்கும் என்.சி.இ.ஆர்.டி. கடந்த மார்ச் 2021-ம் ஆண்டு வழங்கியதாக கூறப்படுகிறது. (எனவே பாடப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள மேற்கூறிய உண்மைக்கு புறம்பான தகவலை உடனடியாக நீக்க வேண்டும் என்று அவர் வழக்கறிஞர் மூலம் NCERT-க்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தார்.)

இந்த கடிதத்தை வைத்து தான், தனக்கு தெரிந்த தகவல்களையெல்லாம் வரலாறாக நினைத்து கடும் ஆவேசத்துடன் பேசுகிறார் கீர்த்தி. மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள NCERT வெளியிட்டுள்ள இந்த பதில் கடிதத்தில் கையெழுத்திட்டிருப்பவர் கவுரி ஸ்ரீவத்சவா.

இதில் ஆச்சரியப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இதே கேள்விகளை நாம் NCERTயிடம் கேட்டபோது, அதற்கு பதிலளித்து பாடபுத்தகத்தின் செய்தியை மெய்ப்படுத்தும் ஆதாரங்களை அள்ளித்தந்திருப் பவரும் இதே கவுரி ஸ்ரீவத்சவா தான். இவர் NCERTன் சமூக அறிவியல் கல்வித்துறையின் தலைவராக (Gouri Srivastava, Head, DESS, NCERT) உள்ளார். இதனால், கீர்த்தி தனது காணொளியில் காண்பிக்கும் கடிதத்தின் உண்மைத்தன்மை குறித்து நமக்கு சந்தேகம் எழுகிறது.

எனவே இவரது பேச்சின் அடிப்படை சாரம்சமாக உள்ள தகவல் அறியும் உரிமைச் சட்ட விவரங்களை பெற முயற்சி செய்தோம். அவர்கள் குறிப்பிட்ட அதே பேராசிரியரின் (Prof.Gouri Srivastava, Head, DESS, NCERT with inputs from Dr.Pratyusa Kumar Mandal, Professor of History, DESS, NCERT) கையெழுத்துடன் நமக்கும் தகவல்கள் கிடைத்தன. அதாவது, அவர்கள் அந்த யூடியூப் வீடியோவில் காட்டும்

234 THEMES IN INDIAN HISTORY – PART II



விசாரணை தரப்பு. இது காவல்துறையின் முன்னிலையில் செய்து காட்டப்பட்டதால் இதனை குற்றவாளியே செய்து காட்டியதாக எடுத்துகொள்ள முடியாது. காவல்துறையின் கட்டுபாட்டில் இருக்கும் ஒருவர் அளிக்கும் வாக்குமூலத்தை போன்றது இது.

மேலும், குறுக்கு விசாரணையின்போது, தான் வருவதற்கு முன்பே மேஜையில் கைவினைப் வெடிபொருட்களை உருவாக்குவதற்கான பொருட்கள் வரிசையாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன என தடய அறிவியல் நிபுணர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே இந்த செய்து காட்டும் முயற்சி ஒரு நாடகம் என்பது தெளிவாகிறது.

## ஐ. பெயர் விளையாட்டுகள் – குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சி

இந்த விவகாரத்தை குழப்பமடைய செய்ய விசாரணை அதிகாரிகள் பெயர் விளையாட்டு களையும் மேற்கொண்டனர். முதல் இரண்டு வழக்குகளில், அதாவது No.54/2011 P.S.சிறப்பு பிரிவு மற்றும் No.6/2012 NIA/Delhi என்ற வழக்குகளில் டெல்லி சிறப்பு பிரிவு காவல்துறை யும் தேசிய புலனாய்வு முகமையும் இந்தியன் முஜாஹிதீனுக்கு எதிராக வழக்கை பதிவு செய்தது. பல முஸ்லிம் இளைஞர்களை தேடப் படும் குற்றவாளிகளாக அறிவித்தது. ஒவ்வொரு வருக்கும் பல பெயர்களை சூட்டியது. அந்த பெயர்கள் அனைத்தும் முஸ்லிம்கள் பொதுவாக வைக்கும் பெயர்கள். இப்படி சூட்டியதன் மூலம் யாரை வேண்டுமானாலும் தேடப்படும் குற்ற வாளி என்று கூறி கைது செய்திடும் நிலைமையை உருவாக்கியது.

அவ்வாறே, இந்த வழக்கு முழுவதும் குற்ற வாளிகளுக்கு பல பெயர்கள் இருக்கின்றன. ஒவ்வொரு முக்கியமான விஷயத்தை செய்யும் போதும் அதாவது, வீடு ஒத்திக்கு வாங்கும்போது ஒரு பெயர், இன்டர்நெட் மையத்தில் பதிவு செய்யும்போது இன்னொரு பெயர், பண பரிவர்த் தனை செய்யும்போது இன்னொரு பெயர், பயணம் செய்ய டிக்கெட் வாங்கும்போது இன்னொரு பெயர், சிம் கார்டு வாங்கும்போது வேறொரு பெயர் இப்படி ஒருவருக்கு பல பெயர்கள். மேற்கூறப்பட்ட விசயங்களில், அதாவது பண பரிவர்த்தனை, சிம் கார்டு வாங்குதல், இன்டர்நெட் மையங்களில் உலாவ செல்லுதல் இவற்றில் ஒருவரின் அடையாள அட்டை நன்கு ஆராயப்படும்.

எனவே பொய்யான அடையாள அட்டையை சான்றாக காண்பித்து அவர்கள் தப்பிப்பது மிக கடினம். சான்றாக காண்பித்த பெயர்களை உடைய நபர்கள் இருந்திருக்கலாம். அவர்கள் இவற்றையெல்லாம் செய்திருக்கலாம். ஆனால் இந்த கோணத்தில் காவல்துறை விசாரணை செய்யவில்லை. வேண்டுமென்றே அந்த பெயர் களை கைது செய்யப்பட்டவர்களின் மீது திணித்துள்ளது.

## ஒ. சாட்சியங்களின் நம்பகத்தன்மையில் எழும் சந்தேகம்

சாட்சியங்களை பின்வருமாறு வகைபடுத் தலாம்.

### பாதுகாக்கப்பட்ட சாட்சியங்கள் :

இந்த சாட்சியங்களின் பெயர்களும் முகவரிகளும் இரகசியமானவை. எனவே இதன் நேர்மையை ஆராய முடியாது. எனவே இது உருவாக்கப்பட்ட சாட்சியங்களாக இருக்கலாம், அவையாவன

a) குற்றவாளி எண் 3, 4 தங்கியிருந்த Zephyr Height (மங்களூர்) கட்டிடத்தின் உரிமையாளர் (PW64)

b) குற்றவாளி எண் 4 இற்கு அப்துல்லா பர்மேட்டில் வீட்டை வாடகைக்கு தந்த வீட்டு உரிமையாளரின் உறவுப் பெண் (PW54)

c) அவரின் கணவர் (PW55). குற்றவாளி எண் 4,2 ஐ பார்த்த தாக கூறியவர்


vaigarai velicham official

d) குற்றவாளி எண் 4–ஐ பார்த்த அண்டை வீட்டார் (PW60)

e) வியாழன் பஜாரில் நடந்த குண்டு வெடிப்பில் பயன்படுத்தப்பட்ட மிதிவண்டியை குற்றவாளி எண் 2, 4–விற்கு விற்ற ஆட்டோ டிரைவர் (PW56)

f) வெஸ்டர்ன் யூனியன் மணி டிரான்ஸ்பர் நிறுவனத்தின் தலைமை அதிகாரி. குற்றவாளி எண் 1 அனுப்பிய பணத்தை இவரிடமிருந்தே குற்றவாளி எண் 3 பெற்றுக்கொண்டான்.

## காவல்துறையின் தயவில் இருக்கும் சாட்சியங்கள்

சட்டத்திற்குப் புறம்பாக தொழில் செய்ப வர்கள் அல்லது உரிமம் இல்லாமல் சாலையோ ரங்களில் வியாபாரம் செய்பவர்கள் அல்லது பொது இடங்களில் தினக் கூலிகளாக வேலை செய்பவர்கள். இந்த வகை சாட்சியங்களில் வருபவர்கள்:

சைக்கிள் பஞ்சர் சரி செய்யும் கடையின் முதலாளி (PW 57). குற்றவாளி எண் 2,3 இற்கு மற்றொரு சைக்கிளை விற்றவர் இவர்.

தினக்கூலி ஒருவர் (PW61). இவர்தான் ஆட்டோ டிரைவருக்கு சைக்கிளை விற்றவர். பின்னர் இந்த சைக்கிளை ஆட்டோ டிரைவர் குற்றவாளிக்கு விற்றார்.

மலக்பேட் ரயில்வே நிலையத்தின் பார்க்கிங் பகுதியில் வேலை செய்பவர். (PW 67). இந்த பார்க்கிங் பகுதியில் தான் குற்றவாளி எண் 2, 3, 4 ஆகியோர் இரண்டு சைக்கிள்களையும் நிறுத்தினர்.

சட்டத்திற்குப் புறம்பாக ஹவாலா தொழில் செய்பவர். இவரிடமிருந்தே குற்றவாளி எண் 3, 5 ஆகியோர் பணத்தை பெற்றனர்.

## காவல்துறையின் அழுத்தத்தினால் பாதிப்புக்கு உள்ளான சாட்சியங்கள்

முறையான தொழில் செய்பவர்கள் ஆனால் தங்கள் தொழில் இயல்பின் காரணமாக சில விதிகளை பின்பற்றாததால் காவல் துறையின் அழுத்தத்திற்கு ஆளானவர்கள் இவர்கள்.

1) குற்றவாளி எண் 2,3 ஆகியோர் உரையாடுவதற்காக சென்ற மங்களூரில் உள்ள மூன்று இன்டர்நெட் மையங்களின் (69, 70, 71) முதலாளிகள்

2) மகாலட்சுமி ஃபேன்சி ஸ்டீல் கடையின் முதலாளி. ரசீது இல்லாமல் குற்றவாளிகளுக்கு பிரஷர் குக்கரை விற்றவர் இவர்

3) பாட்னாவில் உள்ள அப்னா டூர்ஸ் அண்ட் டிராவல்ஸ் நிறுவனத்தின் முதலாளி (PW137). இவரிடமிருந்து தான் குற்றவாளி எண் 4 கிரிஸ் ஜோசி என்ற பெயரில் பணத்தை பெற்று கொண்டான்.

4) ஹைதராபாத்தில் உள்ள சலாமத் டிராவல்சில் பயணச் சீட்டு விற்பவர். 21 பிப்ரவரி 2013 அன்று இரவு 9 மணிக்கு ஹைதராபாத்தில் இருந்து பெங்களூர் செல்வ தற்காக பயணச் சீட்டை இந்த ட்ராவல்சிலிருந்து 20 பிப்ரவரி 2013 அன்று வாங்கிக்கொண்டனர் குற்றவாளிகள்.

**அடுத்த இதழில்....**






# கையில் கிடைத்தப் போராளி

– மு. குலாம் முஹம்மது

**ஜூன் மாத தொடர்ச்சி... இறுதிப்பகுதி.**

**1982,** போடி கலவரம், அப்போதுதான் நடந்து முடிந்திருந்தது. கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ், உடனேயே அங்கே சென்றாக வேண்டும் என அவசரப்பட்டார். உடனேயே பயணமானோம்.

போடி விலக்கை எங்களுக்குக் காட்டினார்கள் கொடிக்கால் அவர்கள். அங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டில் இரண்டு தலித்கள் இறந்துபோனார்கள். இந்தச் செய்தி இந்தியாவையே உலுக்கியது.

இந்தக் கலவரம், துரைராஜபுரத்திலிருந்து தான் தொடங்கியது. அந்த கிராமத்தவர்கள். அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் ஊரைவிட்டுத் துரத்தப்பட்டிருந்தார்கள் என்ற செய்தி கேட்டு அதிர்ந்தோம்.

ஆகவே நாங்கள் துரைராஜபுரத்திற்கு செல்ல வேண்டும் என முடிவு செய்தோம்.

இதில் யார் தேனி மாவட்டத்தில் உதவி செய்வார்கள் எனக் கணக்கிட்டோம்.

அங்கேதான் ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்களைக் கண்டெடுத்தோம்.

ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்கள் முத்துத்தேவன் பட்டியைச் சேர்ந்தவர். அவரும் மனைவியும், மகனும், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

தலீத் மக்களின் விடுதலையிலும் அவர்கள் வாழ்விலும் அதிக அக்கறை எடுத்துக் கொண்டவர். தன் இறுதி மூச்சு வரை அதற்காக உழைத்தவர்.

அவர் மறுநாள் நாம் துரைராஜபுரம் போகலாம், இன்று என்னுடைய வீட்டில் தங்குங்கள் என்றார்கள். அது தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரசால் ஒதுக்கப்பட்ட காலனி வீடு.

அதற்குள் கிடைத்த இடத்தில் நானும் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களும் தூங்கினோம்.

காலையில் ஒரு வாடகைக்காரை அமர்த்திட முயற்சி செய்தோம். காரோட்டிகள் எல்லோரும் உயர் ஜாதிக்காரர்கள். ஆகவே துரைராஜபுரம் வர மறுத்தார்கள்.

பஸ்ஸில் பயணம் செய்யலாம் என்றால் அங்கே காலையில் ஒரு பஸ் போகும். அது உடனேயே திரும்ப வந்துவிடும்.

பின்னர் அந்தி சாய்ந்த பின்னர் ஒரு பஸ் அதுவும் போனவுடன் திரும்பிவிடும். ஆகவே வாடகை கார்தான் ஒரே வழி. ஒரு வழியாக ஒரு ஓட்டுநரை தயார் செய்தோம்.

அவர் அயிரம் நிபந்தனைகளை விதித்தார். அவற்றுள் ஒன்று உங்களுக்கு ஏதாவது நிகழ்ந் தால் நான் பொறுப்பில்லை. நான் என்னையும் காரையும் காப்பாற்றிக் கொண்டு ஓடி வந்து விடுவேன். ஆகவே காருக்கான வாடகை முழுவதையும் இங்கேயே தந்திட வேண்டும் என்றார். இந்த அளவுக்காகவது ஒத்துக் கொண்டாரே என ஆறுதலடைந்தோம். மீதம்


vaigarai velicham official

"அல்லாஹ்வின் வசம்" என முடிவு செய்து கொண்டோம். இத்தனையும் தேனி பஸ் நிறுத்தத்தில்.

ஒரு வழியாகக் காரில் ஏறி பயணம் செய்தோம். போடி விலக்கு. அங்கே கார் சோதனைக்குள்ளாக்கட்டப்பட்டது.

"எங்கே போகின்றீர்கள்?" - காவல்துறை ஆய்வாளர் கேள்வி.

"துரைராஜபுரம்" நான் பதில் சொன்னேன்.

அது கலவரபூமி - தலைமை காவலர்

கலவரத்தைப் பற்றி பத்திரிகை செய்தி தயாரிக்கப் போகின்றோம்"

நானொரு பத்திரிகையாளன் - நான்.

அதற்கென்ன இருக்கின்றது உங்களிடம்?

என்னுடைய பத்திரிகைப் பதிவெண்ணைக் காட்டினேன்.

போகலாம். ஆனால் எல்லா ஆபத்துகளுக்கும் நீங்களே பொறுப்பு என்றார் தலைமைக் காவலர். எங்களுடைய முகவரிகளை முற்றாக வாங்கிக் கொண்டார்.

ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்களே அனைத்திற்கும் வழிகாட்டி. உடன் முத்துத் தேவன்பட்டி "சலீம்"மும் வந்தார்.

காரில் பயணமானோம்.

உயர் ஜாதிக்காரர்களின் பகுதிகள் வரும் போதெல்லாம், வாகன ஓட்டுநர் எங்களிடம் ஆபத்தான பகுதியைக் கடக்கின்றோம், ஜாக்கிரதை என்பார்.

நாங்கள், அல்லாஹ் இருக்கின்றான். அவனே போதுமான பாதுகாவலன் என்போம்.

இடையில் சலீம், தான் மறைத்து வைத் திருந்த ஒரு "பிச்சுவா"வைக் காட்டினான். அச்சம் வேண்டாம் என்றான்.

நாங்கள் அனைவரும் ஒரு நமட்டுச் சிரிப்போடு அடக்கிக் கொண்டோம். ஓட்டுநர் பயந்திருக்க வேண்டும். அதன்பின் அவர் எங்களை எச்சரிப்பதை நிறுத்திக் கொண்டார்கள்.

ஒரு வழியாகத் துரைராஜபுரம் சென்று சேர்ந்தோம்.

அங்கு கிராமத்தவர்கள் அனைவரும் துரத்தப் பட்டிருந்தார்கள்.

நாங்கள் அங்கே சென்று சேரும்போது இரவாகிவிட்டது. மின் இணைப்புகள் இல்லை.

வெகு தூரத்தில் சில தீப்பந்தங்கள் எரிந்தன. அங்கேதான், துரத்தப்பட்ட அந்தத் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்க வேண்டும் எனப்பட்டது.

அதனால் எங்கள் கார் ஓட்டுநரிடம் அங்கே செல்ல வேண்டும் என்றோம்.

வர முடியாது என ஒரேடியாக மறுத்து விட்டார். கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ஓட்டுநரை காத்திருக்காமல் அந்தத் தீப்பந்தங் களை நோக்கி நடக்கத் தொடங்கிவிட்டார். நாங்கள் பின் தொடர்ந்தோம். விரைவாகவே சென்றடைந்தோம்.

கண்ணீர் மல்க அந்த மக்கள் சொன்ன பயங்கரம், இல்லை, குரூரமான நிகழ்வுகளைக் கேட்டோம்.

இரவு அதிகநேரம் நிற்க வேண்டாம். நீங்கள் திரும்புங்கள் நாங்கள் நாளை காலையிலிருந்து எங்கள் இல்லங்களுக்குச் சென்று விடுவோம் என எங்களை ஆறுதல் படுத்துவதுபோல் சொன்னார்கள்.

நாளைப் பகல் நேரத்தில் முடிந்தால் வருவோம் என முடிவு செய்து திரும்பி வந்தோம்.

அன்றும், ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்களின், காலனி வீட்டிலேயே தங்கினோம்.

காலை உணவுக்குப் பின், தேனி பஸ் நிறுத்தம் வந்து, வாடகைக்கார் தேடும் பணியைத் தொடர்நதோம். இந்த முறை முந்தைய நாள்வந்த அதே, ஓட்டுநர் முந்திக்கொண்டு வந்தார். சார் வாருங்கள் நானே வருகிறேன் என்றார்.

அதையே பயன்படுத்திக் கொள்வோம் என அங்கிருந்து பயணமானோம்.

துரைராஜபுரம் சென்றடைந்தோம். அங்கே ஓரிரு குடிசைகளில் தலீத் மக்கள், கலவரத்தில் விரட்டப்பட்டவர்கள் வந்து குடியமர்ந் திருந்தார்கள்.

அதில் ஒரு குடிசைக்குள் சென்றோம்.

ஆஜானுபானுவான ஒருவர் குப்புறப்படுத் திருந்தார். அவர் கையில் ஒரு புத்தகம். அதைப்

படித்துக் கொண்டிருந்தார். உடலில் காயம். ஒரு மருந்தைத் தடவி இருந்தார்.

ஏன் குப்புறப் படுத்திருக்கின்றீர் எனக் கேட்டோம். அவர் முதுகிலிருந்த ஒரு மெல்லியத் துணியை மெல்ல அகற்றிக் காட்டினார்.

முதுகெல்லாம், திருசூலத்தால் குத்தப்பட்ட புண்கள்.

பார்ததும், கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களும், ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்களும் கண்ணீர் வடித்தார்கள். அனையுடைத்த வெள்ளமாய் கண்ணீர்வந்து கொண்டே இருந்தது.

என் கண்களும் பனித்தன.

கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களையும், ஆசிரியரையும் தேற்றியவனாய், அனைவரின் கவனத்தையும் சற்றே திசை திருப்பிட, அது என்ன புத்தகம் அவ்வளவு ஆர்வமாகப் படித்துக் கொண்டிருக்கின்றீர்கள் எனக் கேட்டேன்.

அவர், இது கொடிக்கால் செல்லப்பாவின் 'புறப்படு நீயும் இஸ்லாத்தை நோக்கி' என்ற நூல் என்றார். உண்மையிலேயே எல்லோருடைய கவனமும் ஒன்றாய் திசை திரும்பியது.

சற்றும் எங்கள் அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல், அவர் சொல்வதைச் செவி மடுத்தோம்.

கொடிக்கால் வழிமறித்தார்.

நிலைமை இப்படியே இருந்தால் எப்படி?

அதற்கவர், இந்த கொடிக்கால் செல்லப்பா சொல்வதைப் போல் கேட்க வேண்டியதுதான் என்றார்.

கொடிக்கால் செல்லப்பாவை பார்த்திருக்கின்றீர்களா?

அவர், இல்லை.

உடனேயே நான், இங்கே பாருங்கள்.. இவர்தான் கொடிக்கால் செல்லப்பா என்றேன்.

முடியாத நிலையிலும், அவர் எழுந்து கொடிக்காலை ஆறத்தழுவினார்.

அன்றிலிருந்து தாஃவா தொடக்கம்....

அன்றிலிருந்து தொடங்கி, தேனி மாவட்டத்தின் எல்லாக் கிராமங்களிலும், தெருத் தெருவாக இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தோம்.

தெருத் தெருவாக அமைந்த இஸ்லாமியப் பிரச்சாரம் இப்படி அமைந்தது...

முதலில் அடிப்படை வேலைகள் or Ground Works வேலைகள் இவற்றை நிகழ்ச்சிக்குப் பதினைந்து நாள்களுக்கு முன்பே தொடங்கி விடுவோம். கொடிக்கால்தான் முதலில் களம் காண்பார். தொடர்ந்து தம்பி, மன்சூர், ரவூஃப் ஆகியோர் தொடருவார்கள்.

தேனி மாவட்டத்தில், போடி நூருத்தின், ஹிதாயத்துல்லாஹ் ஆகியோர் உழைத்த உழைப்பிற்கு அளவில்லை.

பல பிரிந்துக்கிடந்த கிராமத்து தலீத் மக்களை தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்று சேர்த்தார்கள். ஒற்றுமைப்படுத்தினார்கள். நமது நிகழ்ச்சிக்கு வரவைத்தார்கள்.

அதேபோல் முஸ்லிம் முஹல்லா பிரமுகர்களிடம், தாஃவா இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியின் இலட்சியத்தைப் புரிந்திட வைத்தார்கள்.

எல்லோரும் கூடி வந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை வரவேற்றார்கள். இஸ்லாத்தை சொன்னார்கள்.

அந்த நிகழ்ச்சிகள் ஏற்கெனவே நான் குறிப்பிட்ட முறைமையின் படியே நடந்தன.

முதலில் வட்டாரப் பிரதிநிதிகள், தீண்டாமைக் கொடுமைகளின் பல்வேறு கோரங்களை விரித்துரைத்தார்கள்.

ஊருக்கே மதியம் விருந்து நிகழ்ச்சி!

உடன் அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களும், உடனிருந்து விருந்துண்டனர். எல்லோரும், எல்லோருக்கும் உணவைப் பரிமாறினார்கள்.

இந்தக் கோமேதக நிகழ்வை காணக் கண்கோடி வேண்டும்.

இப்படி வீதி வீதியாக சென்று இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைத்து மிகப்பெரிய பலன்களைத் தந்துள்ளது. இதை நான், ஜனவரி-1 2023இல் தேவாரத்தில் ஓர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்றபோது கண்டேன். அதுவும் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் நிகழ்ச்சிதான்.


vaigarai velicham official



நிகழ்ச்சியின் தொடக்கத்தில் எங்கள் முந்தைய தாஃவா நிகழ்ச்சிகள் கலந்து கொண்டவர்கள், அவர்களின் வாரிசுகள் இவர்களெல்லாம் என்னிடம் வந்து தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். அல்லாஹ் அனேக மக்களுக்கு, ஹிதாயத்-ஐ கொடுத்திருக்கின்றான் என்பதை அறிந்தேன்.

மட்டற்ற மகிழ்ச்சி...

இந்தத் தேவாரம் நிகழ்ச்சியைத் தொடர்ந்து, சில கிராமங்களுக்கு சென்று பலரை சந்தித்தேன். காலில் ஊனமுற்று வீட்டில் அமர்ந்திருந்த போடி நூருத்தீன் அவர்களுடைய இல்லத்தில் சந்தித்தேன்.

தொடர்ந்து, அன்று தாஃவா செய்த இடங்களுக்கு சென்று பார்த்தேன். கொட்டிய உழைப்பு, அளப்பரிய கள விளைச்சலை தந்துள்ளது என்பதைக் கண்ணால் கண்டேன்.

அன்று களத்தில் எங்களோடு நின்றவர்கள் - பலர் என்னைக் கண்டதும் மகிழ்ந்தார்கள், ஆறத்தழுவினார்கள்.

மகிழ்ச்சியில் கண்கள் நிறைந்தன. ஏதோ ஓர் நிகழ்ச்சி என்று சென்ற நான் நிறைந்த மகிழ்ச்சியோடு திரும்பினேன்.

இன்னும் எங்களுடைய பணிகள் தொடருகின்றன. அன்றைய களப்பணியாளர்கள் ஓய்வில்...

அல்லாஹ் மிக்க மேலானவன்..!





நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து




நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.25/-

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல - ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

- நூலிலிருந்து

ஆங்கிலம் : JOHN FEFFER
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




புகுமுன்...

அன்பார்ந்த நேயர்களே!

**காஸாவும் இஸ்லாமோஃபோபியாவும்**

இன்றைய உலக நிகழ்வுகள், குறிப்பாக பாலஸ்தீனில் நடக்கும் நிகழ்வுகள் - போர் - என்ற பெயரில் நடக்கும் படுகொலைகள் இவை யெல்லாம் உங்கள் கவனங்கள் வெகுவாகவே கவர்ந்து வரும் என்பதில் ஐயமில்லை.

நடக்கும் கோரமான படுகொலைகள் அதிகமாகக் குறிவைத்துக் கொலை செய்யப் படும் முஸ்லிம் பெண்கள், குழந்தைகள் அதற்குச் சொல்லப்படும் - காரணங்கள் இவையெல்லாம் நம்மை வெகுவாகவே உலுக்கி வருகின்றன.

வரலாற்றின் தொடக்கக் காலங்களிலிருந்தே இந்தக் கொலைகளை செய்து வருகிறார்கள் என்பதை சரித்திரம் நமக்குச் சொல்லுகின்றது.

அன்று சிலுவைப் போரின்போது, மஸ்ஜித் அக்ஸா அருகில் குழுமி நின்ற முஸ்லிம்கள், சிலுவைப் போருக்கு வந்த படைகளோடு போரிடவே சித்தமாக இருந்தார்கள். ஆனால், அந்த முஸ்லிம்களிடம் நீங்கள் ஆயுதங்களை கீழே போட்டுவிடுங்கள், நாங்கள் உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம் என்றார்கள்.

முஸ்லிம்கள் ஆயுதங்களைக் கீழப்போட் டார்கள். அடுத்த நிமிடமே அத்தனை பேரையும் வெட்டிக் கொலை செய்தார்கள்.

அவர்களின் குதிரைகள் முழங்கால் வரை நனையும் அளவில், முஸ்லிம்களின் இரத்தத்தை ஆறாக ஓட்டினார்கள். Encyclopedia Britanica

இன்றைக்கு காஸாவில் இஸ்ரேலின் இராணுவ அமைச்சர் YAV Gallant யோவ் கேலண்ட், தன்னுடைய இராணுவத்திடம், நீங்கள் 2014இல் கொலை செய்யாமல் விட்டுவிட்ட குழந்தைகள்தாம் இன்று ஹமாஸ், நம்மோடு போர் செய்கின்றார்கள். - அதனால் காஸாவில் இன்று தவழும் குழந்தைகளை கொலை செய்யாமல் விட்டால் அவர்கள், இன்னும் 10 ஆண்டுகளில் உங்களுக்கு எதிராகப் போருக்கு வந்துவிடுவார்கள்.

இன்னொரு இஸ்ரேலிய இராணுவ தளபதி சொன்னார், பெண்கள் குழந்தைகள் வயதான வர்கள் என எல்லோரையும் கொலை செய்யலாம். அது நமது கடமை.

**அன்று குஜராத்தில் 2002இல்**

முஸ்லிம் குழந்தைகளையும், தாய்மார்களின் வயிற்றியிலிருந்த குழந்தைகளையும் கொன்றார்கள்.

குழந்தைகளை ஏன் கொலை செய்கிறீர்கள்? அவர்கள்தாம். உங்களை ஒன்றும் செய்யவில்லை எனக் கேட்டபோது,

இந்த குழந்தைகள் வளர்ந்தால் அப்போது, நாங்கள்தாம் கொலை செய்ய வேண்டும் என்று பதில் சொன்னார்கள்.

இந்த இந்திய பாசிஸ்ட்டுகள், இஸ்ரேலின் கூட்டுப் படுகொலை இராணுவத்திடம் மூன்று மாதங்கள் கண்டிப்பாகப் பயிற்சி எடுத்தாக வேண்டும் என்பது சங்கப்பரிவாரத்தின் விதி.

இப்போது காஸாவில் ஏன் கண்ணை மூடிக் கொண்டு குழந்தைகளையும் பெண்களையும் கொலை செய்கின்றார்கள் என்பது விளங்கும்.

**இனி ஜான் பெஃபர் கூறுவதைக் கேட்போம்...**

2005ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் ஜார்ஜ்


vaigarai velicham official

புஷ், தன் எதிரிகள் பெயரை மாற்றினார். தன் தாக்குதலில் இலக்கையும் மாற்றினார். என்னுடைய இலக்கு யார் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களை தாக்கினார்களோ அவர்கள் மட்டுமல்ல, மொத்தமாக உலகைக் கவ்விக் கொண்டிருக்கும் "தீவிரவாதம்" என்றதொரு பொது அறிவிப்பைச் செய்தார்.

இந்நிலையில் அவர் 2003ஆம் ஆண்டு ஈராக்கில் படை நடத்தினார். என்னுடைய இலக்கு சதாம் ஹுசைன் என்றார். ஆனால் 2005இல் இறுதியில் அவர் ஈராக்கில் செய்த முஸ்லிம் படுகொலைகள் வெளிச்சத்திற்கு வந்தன. ஈராக்-இல் இஸ்லாத்தை முன் வைத்துப் போராடும் ஒருபெரும் படை தயாரானது.

மரணம் சொர்க்கத்தின் நுழைவுச் சீட்டு என தங்கள் உயிரைத் தந்தவர்கள். அமெரிக்காவின் இனப்படுகொலை படைகளைத் திக்குமுக்காடச் செய்தார்கள். அந்நிலையில் அமெரிக்க மக்களின் ஆதரவு அமெரிக்காவுக்கு குறைந்தது.

- புஷ் இந்நிலையில்தான், இஸ்லாமோ பாசிசம் என்றொரு சொல்லாட்சியை அமெரிக் காவின் குடியரசு மாளிகைக்குள் கொண்டு வந்தார்.

இந்த இஸ்லாமோபாசிசம், சில தீய சக்திகள் என்றில்லை. அவர்கள் அமெரிக்காவுக்கு ஒரு பெரும் அபாயம். சோவித் ரஷ்யாவைவிட மிகப்பெரிய எதிரிகள் எனத் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். இந்த எதிரிக்கு எதிராக அமெரிக்க மக்கள் அனைவரும் ஒரே அணியில் ஒன்று திரள வேண்டும் என அமெரிக்க மக்களை வேண்டினார்.

கொலைகளை மட்டுமே செய்யும் - இஸ்லாமோபாசிசம் வருகின்ற நாட்களில் நம்மைப் பிணமாகக் குவித்து விடும் என்றொரு பீதியைக் கிளப்பினார்.

இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய அழிவு சக்தி இஸ்லாம். அதை நாம் புரிந்துகொள்ளத் தவறிவிடக்கூடாது என்றார். அதேபோல் இஸ்லாமிய பாசிசத்திற்கு எதிரான போர், நாம் ரஷ்யாவுக்கு எதிராக மேற்கொண்ட போரைவிடப் பெரிதாக இருந்திட வேண்டும். அப்போது மட்டுமே நாம் வெற்றிப் பெறுவோம் என்றார்.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்...

அன்பார்ந்த வாசகர்களே!

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்-இன் மேலே உள்ள கர்ச்சனைகளைப் படிக்கும்போது சோவித் ரஷ்யாவை அமெரிக்காதான் நேருக்கு நேர் மோதி வீழ்த்தியது என எண்ணிடத் தோன்றும், உண்மை அதுவல்ல.

ரஷ்யா அன்று அமெரிக்காவைப் போல் உயர்ந்து நின்ற ஒரு வல்லரசு.

எப்போதும் இவை இரண்டும் வார்த்தை ஜாலங்களால் மோதிக்கொண்டன. ஆனால் ஒன்றோடு ஒன்று ஆயுதம் எடுத்து மோதிக் கொண்டதில்லை. இந்த இரண்டு வல்லரசுகளும் அன்றைக்குப் போட்ட வாத - எதிர்வாதங் களைப் பனிப்போர் என்றழைத்தார்கள்.

ஆனால், ரஷ்யாவை வீழ்த்தியது ஆப்கானிஸ் தான் முஜாஹித்கள். அத்தோடு ரஷ்ய வல்லரசு 6 துண்டுகளாக உடைந்தது. இந்த வெற்றி 1979-1980இல் இஸ்லாத்தை முன்வைத்துப் போராடிய ஆப்கானிஸ்தான் முஜாஹித்களுக்குக் கிடைத்தது.

மேலும் விளக்கங்களுக்கு, "ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு" என்ற நூலைப் படிக்கவும்.




அதேபோல் அமெரிக்கா வீழ்ந்ததும் ஆப்கானிஸ்தானில்தான், ஆப்கானிஸ்தானுக்கு அறுதி வெற்றி. ஆகஸ்ட்-15,2021இல் கிடைத்தது. 20 ஆண்டுகாலப் போருக்குப் பின்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தான் வல்லரசு களின் புதைகுழி, கப்ருஸ்தான் என்றாது.

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே!



# வீரமங்கை ஹனாதி ஜராதத்

**ஹனாதி ஜராதத். இவள் 28 வயது**

இளமங்கை. ஃபலஸ்தீனை தயாகமாகக் கொண்டவள். மேற்குக்கரை பகுதியிலுள்ள ஜெனின் என்ற சிறு நகரம்தான் அவளது சொந்த ஊர். படிப்பில் கெட்டிக் காரி. பள்ளிப் பாடங்கள் அனைத்திலும் முதலிடம் பெற்று வந்தாள்.

இதனால் ஜோர்டானிலுள்ள யர்முக் பல்கலைக்கழகத்தில் அவளுக்கு இடம் கிடைத் தது. இந்தப் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. படிப்பில் சிறந்து விளங்கி, அதிக மதிப்பெண்கள் பெறுபவர்களே இங்கு நுழைய முடியும்.

ஹனாதி ஜராதத் சட்டப் படிப்பைத் தேர்வு செய்தாள். வெற்றிகரமாக படித்து முடித்து வழக்கறிஞர் பட்டம் பெற்றாள். வழக்கறிஞர் பட்டம் பெற்ற பிறகு அங்கு 5 வருட காலம் பயிற்சி பெற வேண்டும். அதன் பிறகே அங்குள்ள வழக்கறிஞர்கள் தனியாக பணியாற்ற முடியும்.

அந்த அடிப்படையில் ஹனாதி ஜராதத்தும் வழக்கறிஞர் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தாள். ஃபலஸ்தீன பூமி என்றதும் நமக்கு முதலில் பைத்துல் முகத்தஸும் பிறகு அங்கு நடக்கும் ஜிஹாதும் தான் நினைவுக்கு வரும். ஃபலஸ்தீன பூமியைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமிப்பு செய்து வருகின்றன யூதப் படைகள். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதிகளில் ஒன்றுதான் ஜெனின் என்ற சிறு நகரம்.

இவ்வாறு ஆக்கிரமிப்பு செய்த பகுதிகளில் உள்ள ஃபலஸ்தீனர்களின் வீடுகளை யூதப் படைகள் இடித்து தரை மட்டமாக்குகின்றன. அந்த வீடுகளிலுள்ள இளைஞர்களை 'தீவிர வாதிகள்' என்று சொல்லி சுட்டுத் தள்ளுகின்றன. பெண்களையும் வயோதிகர்களையும் கூட விட்டு வைப்பதில்லை.

கடந்த ஜூன் மாதம், ஜெனின் நகருக் குள் புகுந்த யூதப் படைகள் ஹனாதி ஜராதத்தின் வீட்டை இடித்துத் தள்ளின அவளது சகோதரன் ஃபாதி (23) என்பவனையும் மைத்துனன் ஸாலிஹ் என்பவனையும் அவள் கண் முன்னா லேயே கொஞ்சம் கொஞ்சமாக துடிக்க துடிக்க வெட்டிக் கொன்றனர்.

யூதர்கள் - யூதப் படைகள் அவர்களைக் கொலை செய்ததை பத்திரிகைகள் இப்படி வருணித்தன:

"அவர்கள் ஆடுகளைப் போல் கண்டந் துண்டமாக வெட்டப்பட்டுக் கிடந்தனர்." இதனைப் பார்த்த ஹனாதி ஜராதத் கொதித்துப் போனாள் என்று ஜராதத்தின் சகோதரி பிஸான் (21) கூறுகிறாள். - (தி ஹிந்து 7.8.2003)

பலஹீனமான ஆண்களையும், பெண்களை யும், சிறுகுழந்தைகளையும் பாதுகாப்பதற்காக, அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் போர் செய்யாதிருக்கக் காரணம் யாது? (அவர்களோ) "எங்கள் இறைவனே! அக்கிரமக்காரர்கள் இருக்கும் இவ்வூரைவிட்டு எங்களை வெளிப் படுத்துவாயாக, எங்களுக்காக உன்னிடமிருந்து (தக்க) ஒரு பாதுகாவலனை அளித்தருள்வாயாக, இன்னும் எங்களுக்காக ஓர் உதவியாளனையும்


vaigarai velicham official

அளித்தருள்வாயாக." என்று பிரார்த்தனை செய்கிறார்கள். (திருக்குர்ஆன் 4:75)

அல்லாஹ்வின் இந்த அழைப்பு ஹனாதி ஜராதத்தின் காதுகளில் ஒலித்துக் கொண்டே யிருந்தது. இந்த யூதர்களுக்கு தன்னால் முடிந்த அளவு அழிவை ஏற்படுத்த வேண்டும். அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதாகி தனது சகோதரனின், மைத்துனனின் ரத்தங்களுக்குப் பழிவாங்க வேண்டும் என்று அவர்கள் உறுதி பூண்டாள்.

இஸ்ராயீலியப் படைகளுக்கெதிராகப் பேராடிவரும் 'மக்கள் எழுச்சி' என்னும் படையில் தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டாள். தன்னை தயார்படுத்த ஆரம்பித்தாள். திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்து முடித்தாள். ஹனாதி ஜராதத்தின் வழக்கறிஞர் பயிற்சி முடிவதற்கு இன்னும் ஒருவார காலமே இருந்தது. இன்னும் ஒரு வாரம் வந்தால் 5 வருட பயிற்சிக் காலம் பூர்த்தியாகி வழக்கறிஞர் ஆகிவிடலாம். அதன்பிறகு யாரையும் சாராமல் தனியாக வழக்கறிஞர் பணிகள் செய்யலாம். கை நிறைய சம்பாதிக்கலாம், உலகத்தில் ஒரு கவர்ச்சியும் வளமும் நிறைந்த வாழ்க்கை அவளுக்கு முன்னால் நின்றது.

அக்டோபர் 4ம் தேதி தான் பயிற்சிபெறும் அலுவலகத்திற்கு தினமும் காலை 7.30 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்படுவாள். அதேபோல் அன்றும் தனது வீட்டை விட்டுப் புறப்பட்டாள் ஹனாதி.

ஆனால் அலுவலகத்திற்கு அல்ல, வழமை போல் அல்லாமல் அவள் பாதை மாறிப் போனாள். இந்தப் பாதை சுவனத்தின் பாதை.

ஆம்! அன்றைய தினம் அதனை மெய்ப் பித்துக் காட்டினாள். தான் ஒரு வீரமங்கை என்பதை இந்த உலகுக்குப் பறைசாற்றினாள். அவள் நேராக வடக்கு இஸ்ராயீல் நோக்கிச் சென்றாள். ஹைஃபா என்ற துறைமுக நகருக்குள் நுழைந்தாள்.

யூதர்கள் கூட்டமாகக் குழுமியிருந்த 'மேக்சிம் ரெஸ்டாரெண்ட்' என்ற விடுதிக்குள் நுழைந்தாள். அல்லாஹு அக்பர்! அவள் பழி வாங்கிட நினைத்த யூதர்களைப் பழி வாங்கினாள். தன் உடன் பிறப்புகளை வெட்டிச் சாய்த்து வேடிக்கைப் பார்த்தவர்களை, அவள் சாய்த்தாள் அதில் தன்னையும் தந்தாள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) தான் சொர்க்கத்திற்கு செல்லும் பாதையில் 19 யூதர்களை நரகத்திற்கு அனுப்பினாள் ஹனாதி. தனது லட்சியத்தை அடைந்து விட்டாள்.

ஃபலஸ்தீன பத்திரிகையாளர் அமீனாஹாஸ் இவ்வாறு கூறுகிறார்...

'ஹாரெட்ஸ் என்ற பத்திரிகையில். அதுதான் அவர்களது பலம் அந்தப் போராளிகள் தங்கள் சமுதாயத்தின் பிரதிநிதிகளாக நிற்கின்றனர். ஆக்கிரமிப்புக்குள் அடிமைகளாக வாழ்ந்திட அவர்கள் தயாராக இல்லை. அவர்களது சொந்த மண்ணும் மக்களும் அழிக்கப்படுவதைக் கண்டு அவர்கள் ஆண்மையற்றவர்களாக இருக்க வில்லை. தங்கள் ஃபலஸ்தீனத் தலைமையின் மடமையைக் கண்டு அவர்களுக்குப் பொறுக்க வில்லை. அதனால் அவர்கள் தாக்குதல் நடத்து கின்றனர். (பிரண்ட் லைன், நவம்பர்-7, 2003)

ஹனாதி ஜராதத்தின் தற்கொலை தாக்குதல் கண்டு உலகமே வியப்பில் ஆழ்ந்தது. ஒரு பெண் அதுவும் ஒரு வழக்கறிஞர் என்று அனைத்துப் பத்திரிகைகளும் ஆச்சர்யப்பட்டு செய்திகள் வெளியிட்டன.

கொதித்துப் போனது இஸ்ராயீலிய அரசு, அதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ன செய்யலாம்? சம்பந்தமில்லாமல் அடுத்த நாளே (அக்டோபர், சிரியா நாட்டின் மீது குண்டுகளை வீசியது. 20 வருடங்களுக்கு முன் இஸ்லாமியப் போராளிகள் பயிற்சி எடுத்த இடம் ஒன்றை நோக்கி குண்டுகளை வீசியதாக அது கூறிக்கொண்டது.

ஹனாதி ஜராதத் தனது ஷஹாதத்தோடு யூதர்களுக்கெதிரான தாக்குதல்கள் நிற்கப்போவ தில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி யிருக்கின்றாள்.

இன்னும் அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டோரை "(அவர்கள்) இறந்து விட்டவர்கள்" என்று கூறாதீர்கள். அப்படியல்ல, அவர்கள் உயிருள்ளவர்கள், எனினும் நீங்கள் (இதை) உணர்ந்துகொள்ள மாட்டார்கள். (திருக்குர்ஆன் 2:154)



# மருந்துகளும் தாய்ப்பாலும்!

**‘டெட்ராசைக்கிளின்’** என்ற மாத்திரை தாய்ப்பால் வழி குழந்தையின் எலும்புகள், பற்கள் ஆகியவற்றைப் பாதிக்கும்.

புற்றுநோய் தடுப்பு மாத்திரை உட்கொள்ளும் தாய்மார்கள் பாலூட்டாமலிருப்பது நலம்.

பெரும்பாலான மருந்துகள் தாய்ப் பாலின் உள் ஊடுருவி விடுகின்றன.

குழந்தைகளுக்குக் கிடைக்கும் மிகவும் சக்தி மிக்க உணவு தாய்ப்பால். மனித வரலாற் றோடு பின்னிப்பிணைந்தது தாய்ப்பால் பாரம்பரியம். தாய்ப்பால் பற்றி இஸ்லாம் இப்படி வழி காட்டுகிறது.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு (அவர்கள் பிறந்ததிலிருந்து) இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டவும்.

(அல்குர்ஆன் 2:233)

மேலும் திருமறைக் குர்ஆனின் 2:233, 31:14, 46:15 ஆகிய வசனங்களின் அடிப்படையில் ஆய்வு செய்த இஸ்லாமிய அறிஞர்கள் குறைந்தது குழந்தைக்கு ஆறுமாதம் தாய்ப்பால் ஊட்டப்பட வேண்டும் என் கின்றனர்.

அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள் பாலூட்டப் படலாம்.

இந்த கால அளவுக்கு முன் பால்குடியை நிறுத்த வேண்டுமென்றால் தாய் தந்தை இருவரும் ஆலோ சித்து குழந்தையின் நலன் கருதி முடிவெடுத்திட வேண்டும் என்றும் குர்ஆன் வழிகாட்டுகிறது. ....

இன்னும் (தாய் தந்தையர்) இருவரும் பரஸ் பரம் இணங்கி, ஆலோசித்துப் பாலூட்டலை நிறுத்த விரும்பினால், அது அவர்கள் இருவர் மீதும் குற்ற மாகாது...” (அல் குர்ஆன் 2:233)

தாய்ப்பால்தான் குழந்தைகளுக்கு மிகவும் எளிதாக ஜீரணமாகும் உணவு. தொற்று நோய்கள் வராமல் தடுக்கும் உன்னத ஆற்றல் அதற்குண்டு.

தாய்ப்பால் கொடுக்கும்போது தாய் முடிந்த வரை மருந்துகள் உண்பதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. பெரும்பாலான மருந்துகள், தாய்ப் பாலின் உள் ஊடுருவி விடுகின்றன. இந்த மருந்துகள் பெரிய அளவில் குழந்தைகளைப் பாதிக்கும்.

தலைவலி மாத்திரைகளில் காணப்படும் இரசாயனப் பொருள்கள் பால் சுரப்பதைத் தடுப்பதுடன் குழந்தைகளின் ஜீரண சக்தியையும் கெடுக்கும்.

‘டெட்ராசைக்கிளின் Tetracycline’ என்ற மாத்திரையைத் தாய் சாப்பிட்டால் அஃது தாய்ப்பால் வழி குழந்தையின் எலும்புகள், பற்கள் ஆகியவற்றைப் பாதிக்கும். பற்கள் மஞ்சள் நிறமாக மாறலாம். நிச்சயமாகப் பற்களின் நிறம் பாதிக்கப்படும்.

இந்த மாத்திரை ஒரு (AntiBiotic) ஆண்டி பயாடிக் அதாவது உடலிலுள் புகுந்த உடலுக்கு ஊறு விளைவிக்கும் கிருமிகளை எதிர்த்துப் போராடும். சக்தியை அதிகப்படுத்தும் மாத்திரை.



vaigarai velicham official

இந்த டெட்ரா சைக்கிளின் மாத்திரைக்கு ஓர் பின்னணி உண்டு.

அது, இந்த மாத்திரைகளின் பிறப்பிடம் அமெரிக்கா. பெரிய அளவில் அமெரிக்காவில் உற்பத்தியானது. பின்னர் இதனை உட்கொள்ளும் நோயாளிகளின் உடலில் ஏற்படும் பின் விளைவுகள் வெளியே தெரிந்திட வந்தன.

இந்தப் பின்னணியில் இந்த மாத்திரையின் விற்பனை அமெரிக்காவில் தடை செய்யப் பட்டது.

அங்கே எஞ்சிய மாத்திரைகள் கீழை நாடுகளுக்கு - இந்தியா உட்பட்ட ஆசிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. சில நேரங் களில் மலிவு விலைகளிலும், சில நேரங்களில் மருத்துவ உதவி என்ற பெயரிலும் கீழை நாடுகளுக்கு வந்தன.

எது எப்படி ஆனாலும் இந்த மாத்திரை பின் விளைவுகள் பலவற்றைக் கொண்டது.

கருவுற்றிருக்கும் போதோ, பாலூட்டும் போதோ, தாய் இந்த மாத்திரையை உட்கொண்டால் குழந்தை யின் பற்கள் மஞ்சள் நிறத்தை அடையும் என்பது மட்டும் உறுதி. இதனால் இந்த மாத்திரைக்குப் பக்கத்தில் கூட போகக்கூடாது.

முடிந்தவரை பாலூட்டும் தாய்மார்கள் மருந்துகளை உட்கொள்வதைத் தடுப்பது நல்லது.

'தைராயிடு சுரப்பிகள் பிரச்னையாகி, அதிலிருந்து விடுபட மாத்திரைகளைச் சாப்பிடும் தாய்மார்கள்,



(Anti-Thyroid) கிருமிகளால் ஏற்படும் நோய்களிலிருந்து விடுபட்டிட (Anti Bacterial) மருந்துகளை உட்கொள்ளும் தாய்மார்கள், அதேபோல் முன்னர் நாம் குறிப்பிட்ட Anti Biotio உடலின் தடுப்புச் சக்தியை அதிகப்படுத் திட, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப் படுத்திட மாத்திரைகள் உட்கொள்ளும் தாய்மார்கள், கேன்சர் என்ற புற்று நோய் தடுப்பு மாத்திரை களை உட்கொள்ளும் தாய்மார்கள் இவர்கள் பாலூட்டாமலிருப்பது நலம்.

பாலூட்டும் தாய் உட்கொள்ளும் சில மாத்தி ரைகள் குழந்தையின் சிறுநீரகத்தைப் பாதிக்கும் அளவுக்கு ஆபத்தானவை என்பதை வைத்துப் பார்த்திடும் போது, பாலூட்டும் தாய்மார்கள் மாத்திரைகளை உட்கொள்வதிலிருந்து அறவே ஒதுங்கி இருப்பது நல்லது.

இங்கே இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். மருந்துகளைத் தயாரிக்கும்போது அவை பாலூட்டும் தாய்மார்களின் பாலூட்டும் சக்தியையும் குழந்தையையும் பாதிக்குமா? பாதிக்காதா? அப்படிப் பாதித்தால் எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பது குறித்து எந்தச் சோதனையும் நடத்தப்படுவதில்லை.

இதனால் பாலூட்டும் தாய்மார்கள் எந்தெந்த மாத்திரைகளைச் சாப்பிடலாம், எந்தெந்த மாத்திரைகளைச் சாப்பிடக்கூடாது எனக் குறிப்பிட இயலுவதில்லை.

இந்தச் சோதனைகள் நடத்தப்படுமே யானால், மருந்துகளின் வெளியில் ஒட்டப் படும் குறிப்புகளடங்கிய காகிதத்திலேயே இந்த மருந்தை பாலூட்டும் தாய்மார்கள் உட் கொள்ளக் கூடாது எனக் குறிப்பிட்டு விடலாம்.

எனினும் நமது டாக்டர்கள் - மருத்துவர்கள் ஓரளவுக்கு இதைக் கண்டுபிடித்துச் சொல்ல முடிந்தவர்களாக இருக்கின்றார்கள். அவர் களின் அனுமதி பெற்றே மருந்துகளை சாப்பிட வேண்டும்.

(கட்டுரையில் இடம்பெற்ற தகவல்கள் டாக்டர் குரு பிரசாத் மொகந்த அவர்கள் The New Indian Express-ல் *11.04.2006* எழுதிய கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டவை அத்தோடு Child Development என்ற நூலும் உதவியது.)

தொகுப்பு MGM

# வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க



- முடிந்தவரை. அதிகமாக வெயில் இருக்கும் சமயத்தில் வெளியே செல்வதைத் தவிர்க்கலாம்.
- வெளியே போவதற்கு முன்பு தண்ணீர், சிறிது உப்பு கலந்த மோர் அல்லது பழரசம் அருந்துவது நல்லது.
- வெளியே போகும் பொழுது அவசியம் குடை எடுத்துச் செல்லவும்.
- தலையில் ஏற்படும் சூட்டைத் தணிக்க தலையில் தொப்பி அணியலாம்.
- குறைந்தது 2 - 3 லிட்டர் தண்ணீர் அல்லது வேறு ஏதாவது திரவமோ ஒரு நாளைக்குத் தேவைப்படும். இதய நோய் அல்லது சிறுநீரக நோய் உள்ளவர்கள் டாக்டரின் ஆலோசனைப் படி தேவையான நீரை அருந்தலாம்.
- முதியோர்களுக்கு வெயில் அதிகம் இருந் தாலும், தாகம் அவ்வளவாக எடுக்காது. ஆகையால் போதிய தண்ணீர் குடிக்க மாட் டார்கள். வீட்டில் உள்ளவர்கள் முதியோர் களைப் போதிய தண்ணீரைக் குடிக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
- தர்ப்பூசணி, இளநீர், ஆரஞ்சு போன்ற பழ ரசங்களை அதிகமாக எடுத்துக்கொள்ளலாம்.
- கோடைக்கேற்ற பழம் நுங்கு.
- நன்னாரி சர்பத் உடலுக்கு குளிர்ச்சியைத் தரும், பதநீர் கோடையில் உடலுக்கு மிகவும் நல்லது.
- மசாலா அதிகம் உள்ள உணவைத் தவிர்க் கலாம் அல்லது குறைக்கலாம். உதாரணம்: அசைவ உணவு
- கஞ்சி - கம்பு, தினை ஆகியவற்றில் செய்த கஞ்சி, உடல் சூட்டைக் குறைக்க வல்லது. எளிதில் செரிக்கவல்லது.
- செயற்கைப் பானங்களை முடிந்தவரைத் தவிர்க்க வேண்டும்.
- கண்கள் மிகவும் சூடாக இருந்தால் வெள்ளரிக்காயை நறுக்கி கண்கள்மேல் சிறிது நேரம் வைத்தால், கண் சூடு குறையும். காற்றோற்றமுள்ள அறையில் முடிந்தவரை இருந்தால் நல்லது.
- மின் விசிறி, ஏர்கூலர், குளிர்சாதனப் பெட்டி ஆகிய உபகரணங்களைத் தேவைக்கேற்ப உபயோகிக்கலாம்.
- படுக்கை அறையில் வெட்டிவேர்க் கொடியைத் தண்ணீரில் நனைத்துத் தொங்க விட்டால் அறை குளிர்ச்சியாக இருக்கும்.
- வேர்க்குரு அதிகம் இருந்தால் கேலமைன் கிரீமை உடலுக்குத் தடவலாம்.
- லேசான பருத்தியிலான அல்லது கதர் ஆடைகளை அணிவது நல்லது.
- காலையிலும் இரவிலும் குளித்தால் உடல் சூடு குறையும்.
- கண்ணிற்குக் குளிர்ச்சி தரும் கண்ணாடியை உபயோகப்படுத்தலாம்.
- அரிப்பு அதிகமாக இருப்பின், டாக்டரைக் கலந்து அதற்குத் தேவையான மாத்திரைகள் மற்றும் களிம்பினை உபயோகப்படுத்தலாம்.

ஆகவே கோடையில் குளிர்ச்சி பெற தண்ணீர், மோர், பழரசம், பதநீர், நுங்கு. கஞ்சி போன்றவைகளைத் தினமும் சேர்த்துக்கொண்டு, லேசான பருத்தி ஆடை அணிந்து, தினமும் இருமுறை குளித்து வந்தால் போதும். நாம் இருக்கும் இடத்திலேயே ஊட்டியின் குளிர்ச்சியை ஓரளவிற்கு அனுபவமிக்க முடியும்.

**- ஆடலரசு**

- நன்றி முதுமை எனும் பூங்காற்று



vaigarai velicham official



# எதிர் உணவு பற்றி சித்த மருத்துவம் கூறுவது என்ன?

**Dr. S.அருள் சொரூபி,** M.D.(S),M.A.,(Yoga), சித்த மருத்துவர்

• சிலவகை உணவுப் பொருட்களை ஒன்றாகக் கலந்து சாப்பிடும்போது ஆரோக்கியம் அதிகரிக்கிறது. சரிவிகித உணவான கார்போஹட்ரேட், புரோட்டீன், கொழுப்புச் சத்து மூன்றும் தேவையான அளவு எடுத்துக் கொள்வதையே Balanced diet என்று சொல்கிறோம்.

• இதில் எதிர் உணவு என்றால் என்ன? உணவில்கூட எதிரி இருக்கிறதா என்றால், உண்டு என்றே கூற வேண்டும். சில உணவுப் பொருட்கள் தனியாகச் சாப்பிடும்போது நல்ல பலனைக் கொடுக்கும் அதே உணவுப் பொருளை வேறு வகை உணவுப் பொருளோடு சேர்த்துச் சாப்பிடும்போது ஒவ்வாமை ஏற்படும். எடுத்துக்காட்டாக, மீனுடன் முள்ளங்கியைச் சேர்த்துச் சாப்பிட்டால், ஜீரண சக்தி குறையும்.

• நெய்யையும் தேனையும் ஒன்றாகக் கலந்து சாப்பிடக்கூடாது. ஏனெனில் நெய்யில் உள்ள fatty acid chain மற்றும் தேனில் உள்ள சர்க்கரையை ஒன்றாகச் சேர்த்துச் செரிக்கும் சக்தி நம் வயிற்று நொதிகளுக்கு இல்லை.

• தயிர், மீன் இரண்டையும் ஒன்றாகச் சாப்பிடக்கூடாது. இறைச்சியையும் விளக்கெண்ணையையும் சேர்த்துச் சமைக்கக்கூடாது.

• கரும்பை மென்று சாப்பிட்டவுடன் நீர் அருந்தக்கூடாது.

• அகத்திக் கீரையையும் ஆல்கஹாலையும் ஒன்றாகச் சாப்பிடக்கூடாது.

சில வகைப் பொருட்கள் எளிதில் செரிக்க வேண்டுமாயின் இப்படிச் சாப்பிடலாம்!

• வேர்க்கடலை அதிகம் சாப்பிட்டால் பித்தம் குறைய வெல்லம் சேர்த்துச் சாப்பிடலாம்.

• பலாப் பழம் அதிகம் சாப்பிடும்போது தேன் கலந்து சாப்பிட எளிதில் செரிப்பதுடன் வாயுத்தொல்லை ஏற்படாது.

• கரும்புச் சாறு குடிக்கும் போது அதனுடன் எலுமிச்சை, ஏலம், சுக்கு கலந்து குடித்தால் ஜீரண சக்தி அதிகமாகும்.

மாம்பழம் அதிகம் சாப்பிட்டுப் பேதியாகாமல் இருக்க மாங்கொட்டையைச் சுட்டு அதன் உள்ளிருக்கும் பருப்பைச் சாப்பிட, மாம்பழத்தால் ஏற்பட்ட சூடு தணியும்.

- நன்றி முதுமை எனும் பூங்காற்று

# தீய எண்ணம் களைவீர்

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

எண்ணங்கள் பொருத்தே செயல்கள் அமைகின்றன. மனிதனின் எண்ணம் தூய்மையாக இருக்கும்போது அவன் செயல்களும் தூய்மையாகிவிடுகின்றன. நாம் நம் மனதை எப்பொழுதும் மிகவும் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். பொறாமை, கோபம், வெறுப்பு, காமம் போன்ற தீய எண்ணங்கள் நம் மனதில் எழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் அசுத்தமாக, அறுவெறுப்பாக கருதும் ஒரு விலங்கு நம் வீட்டின் உள்ளே வர முயற்சிக்கும்போது அதை உள்ளே வர விடாமல் தடுக்க நாம் வீட்டின் கதவை மூடுவதுபோல் உங்கள் மூளையில் ஏதேனும் ஒரு தீய எண்ணம் நுழைந்து தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன் உங்கள் மனதை மூடிவிடுங்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களிடத்தில் மனிதர்களில் சிறந்தவர் யார்? என்று வினவப்பட்டார். தனது உள்ளத்தில் இருப்பவற்றை அகற்றுபவனும் உண்மை பேசுபவனும் ஆவான் என்றார்கள்.

அதற்கு நபித்தோழர்கள் உண்மை பேசுபவனை நாம் அறிவோம். உள்ளத்தில் இருப்பவற்றை அகற்றுபவன் என்றார் யார்? என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், உள்ளத்தில் இருப்பதை அகற்றுபவர் என்பது இறையச்சமுள்ள பிறருடைய குறைகளை கூறுவதை விட்டும் தூய்மையாக இருப்பவன் ஆவான். அவனிடம் எந்த பாவமும் கோபமும் குரோதமும் பொறாமையும் இருக்காது என்றார்கள். (இப்னுமாஜா)

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருக்கும்போது நபி (ஸல்) அவர்கள் தற்போது சுவர்க்க வாசிகளில் ஒருவர் உங்களிடத்தில் வருவார் என்று கூறினார்கள்.

அப்போது அன்ஸாரிகளில் ஒருவர் உளூ செய்ததன் பின்னர் இடது கையில் தனது பாதணிகளை தூக்கிய நிலைமையில் வந்தார். இரண்டாவது நாளும் முதல் நாள் கூறியதைப் போன்றே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதே மனிதர் அவ்வாறே வந்தார். மூன்றாவது நாளும் நபி (ஸல்) அவர்கள் கூறினார். அதே மனிதர் மூன்றாவது நாளும் அதே நிலையில் வந்தார்.

பின்னர் நபி (ஸல்) அவர்கள் சென்றபோது அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னு ஆஸ் (ரழி) அவர்கள் அந்த மனிதரை பின் தொடர்ந்து சென்று அவருடைய நிலவரத்தை அறிய அவரிடம் மூன்று நாட்கள் தங்குவதற்கு அனுமதி கோரினார். அதற்கவர்

அனுமதி வழங்கினார்கள்.

அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னு ஆஸ் (ரழி) அவர்கள் கூறியதாக அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். மூன்று நாட்கள் அவர்கள் இரவில் நின்று வணங்க வில்லை. ஆனால் இரவில் படுக்கைக்கு செல்கின்றபோது அல்லாஹ்வை நினைவு கூறுவார்கள். துஆவை ஓதுவார்கள் பின்னர் அல்லாஹு அக்பர் என்று கூறுவார்கள். பின்னர் ஃபஜர் வரையும் தூங்குவார்கள்.

பிறரைப் பற்றி நல்லவற்றையே கூறுவார்கள். மூன்று நாட்களும் இவ்வாறு அவரைப் பார்த்தேன். இதன் பின்னர் அவரின் நல்லமல்களை குறைவாக மதிப்பிட எனக்கு நேரிட்டது. அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னு ஆஸ் (ரழி) அவர்கள் அந்த மனிதரைப் பார்த்து நபி (ஸல) அவர்கள் உம்மைப் பார்த்து சுவர்க்க வாசிகளில் ஒருவர் வருவார் என்று கூறினார்கள். மூன்று முறையும் நீங்களே வந்தீர்கள். இதனால் நீங்கள் விசேஷமாக எந்த நல்அமலை செய்கிறீர்கள் என்பதைப் பார்க்கவே நான் உங்களிடத்தில் தங்கினேன். ஆனால் எந்தவித அமல்களையும் அதிகமாக நீங்கள் செய்யவில்லை என்று கூறிவிட்டு நபி (ஸல்) அவர்கள் உங்களை சுவர்க்கவாசி எனும் கூறும் அளவிற்கு என்ன செய்தீர்கள் என்றார்.

அதற்கு அம்மனிதர் "நான் எந்த முஸ்லிம் களுக்கும் தீங்கழைக்கவும், மோசடி செய்யவும் மாட்டேன். அவ்வாறே என்னை விட எவரையெல்லாம் அல்லாஹ் உயர்த்தி நல்லவற்றை கொடுத்திருக்கின்றானோ அவற்றில் நான் பொறாமை கொள்ள மாட்டேன் என்று கூறினார்கள்"

அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னு ஆஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள். இந்த விஷயமே எம்மால் செய்ய முடியாத காரியமாகும். (அஹமத்)

நம்மை பாவத்தின் பக்கம் அழைத்து சென்ற நரகப் படுகுழியில் தள்ளக் கூடிய தீய எண்ணங்களை விட்டு நாம் தூர விலகி இருக்க வேண்டும். இன்னும் நம் எண்ணங்களை தூய்மைப்படுத்தக்கூடிய நற்காரியங்கள், திக்ரு, குர்ஆன் ஓதுதல், சுய பரிசோதனை, சக முஸ்லிம்களுக்கு நல்லவற்றையே விரும்பக்கூடிய போன்ற காரியங்களில் நாம் ஈடுபட வேண்டும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

"நீங்கள் ஒருவருக்கொருவர் கோபித்துக் கொள்ள வேண்டாம். பொறாமை கொள்ள வேண்டாம் உறவினரை துண்டித்து நடக்க வேண்டாம், தீமையின்பால் ஆலோசனை செய்துகொள்ள வேண்டாம், அல்லாஹ்வுக்கு வழிபடக்கூடிய சகோதரர்களாக இருந்து கொள்ளுங்கள். ஒரு முஸ்லிம் தனது சகோதரனுடன் மூன்று நாட்களுக்குமேல் பேசாமல் இருப்பது ஹராமாகும். (முஸ்லிம்)




# 5.7.2024 அன்று சீர்காழி தாலுக்கா எழுக்கூர் கிராமத்தில் தாஃவா பணி















5.7.2024 அன்று சீர்காழி தாலுக்கா எழுக்கூர் கிராமம் ஜெபஸ்தியார் கோயில் தெரு வடக்குத்தெரு மாரியம்மன் கோயில் தெரு ஆகிய இடங்களில் அன்பகம் தாவா பணி நடைபெற்றது அது சமயம் திருக்குர்ஆன் மொழியாக்கம் மற்றும் இஸ்லாமிய மார்க்க விளக்க நூல்கள் இஸ்லாத்திற்கு வந்திருந்த ஆசிரியர்கள் எழுதிய சில நூல்களும் இலவசமாக விநியோகிக்கப்பட்டது



# தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள வரலாற்று கட்டிடங்களில் ஆதிக்கத்தை காட்டுவது எப்படி?

## வழிகாட்டுகிறார் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி கங்கப்பா

**கர்நாடக** மாநிலம் தும்கூர் மாவட்டம் தாளகரே கிராமத்தில் பிறந்தவர் கங்கப்பா. மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆருடன் நெருங்கி பழகியவர். 1967-ல் ஐஏஎஸ் அதிகாரியாக தேர்வாகி, தமிழகத்தில் திறம்பட பணியாற்றியவர் இவர். அப்போதிருந்தே கோயில் நிர்வாகம் அரசிடம் இருக்கக்கூடாது என வலியுறுத்தி வருபவர். இவரது திறமை பல இருந்தாலும், கவனிக்க தக்க தன் திறமையை பேட்டியாக கொடுத்துள்ளார். அவரது வார்த்தைகளிலிருந்தே படிப்போம்.

"நான், வேலூர் மாவட்ட ஆட்சியராக இருந்த போது வேலூர் கோட்டை ஜலகண்டேஸ்வரர் கோயிலில் 400 ஆண்டுகள் மூலவர் வழிபாடு இல்லாமல் இருப்பதை எனது கவனத்துக்கு கொண்டு வந்தனர். தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் கோயில் இருந்ததால் கவனத்துடன் செயல்பட வேண்டியிருந்தது.

ஜலகண்டேஸ்வரர் கோயில் மீட்பு குழுவினர் உதவியுடன் கடந்த 1981 ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் தேதி அதிகாலை சிலையை வைக்க முடிவானது.

முன்கூட்டியே வேலூர் கோட்டையின் தொல்லியல் துறை கண்காணிப்பாளரை தர்மபுரிக்கு ஆய்வுக்கு செல்லுமாறு கூறிவிட்டேன். நான், திருவண்ணாமலைக்கு ஆய்வுக்காக சென்று விட்டேன். திட்டமிட்டபடி சத்துவாச்சாரியில் இருந்து எடுத்து வரப்பட்ட சிவலிங்கம் மார்ச் 16ஆம் தேதி அதிகாலை கோயில் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த தகவல் காட்டுதீ போல் பரவியதால் ஆயிரக்கணக்கான மக்கள் கோயிலில் திரண்டு வழிபட்டனர்" என்றார்.

சிலை வைக்கப்பட்ட சம்பவம் அந்த நேரத்தில் மத்திய, மாநில அரசுகளின் கௌரவ பிரச்சனையாக பார்க்கப்பட்டது.

"கோயில் பிரச்சனையில் எம்ஜிஆர் எனக்கு ஆதரவாக இருந்தார். ஒரு வாரம் கழிந்த பிறகு பிரதமர் அலுவலக துணை செயலாளர் பாலகிருஷ்ணன் தொலைபேசியில் பேசினார். கோயில் விவகாரத்தில் உங்களுக்கு எந்த பிரச்சனையும் வராது என மேடம் (இந்திரா காந்தி) கூறிவிட்டார் என்ற தகவல் நிம்மதியாக இருந்தது" என்றார் கங்கப்பா.

ஆதாரம்: இந்து தமிழ் திசை.
டிசம்பர் -20-2018.


vaigarai velicham official

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்,** மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்,** மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்,** டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்,** நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்,** ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்,** பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்,** மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்,** மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்,**<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்,** மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | **26/11- விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |


vaigarai velicham official

| | | |
|---|---|---|
| 46. | **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்**<br>எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 47. | **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி | - ரூ.150.00 |
| 48. | **இஸ்லாம் ஒன்றே வழி!**<br>அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.120.00 |
| 49. | **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு**<br>ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 50. | **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?**<br>ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ | - ரூ.300.00 |
| 51. | **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** | - ரூ.20.00 |
| 52. | **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** | - ரூ.100.00 |
| 53. | **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி**<br>கரன் ஆம்ஸ்ட்ராங் | - ரூ.20.00 |
| 54. | **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** | - ரூ.50.00 |
| 55. | **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** | - ரூ.50.00 |
| 56. | **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** | - ரூ.40.00 |
| 57. | **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** | - ரூ.60.00 |
| 58. | **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** | - ரூ.60.00 |
| 59. | **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** | - ரூ.25.00 |
| 60. | **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** | - ரூ.20.00 |
| 61. | **அயா சோபியா உருவான வரலாறு** | - ரூ.50.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 01. | **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்**<br>A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | - ரூ.100.00 |
| 02. | **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்**<br>ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | - ரூ.100.00 |
| 03. | **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்**<br>ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, | - ரூ.170.00 |
| 04. | **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?**<br>தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.140.00 |
| 05. | **பலி கடாக்கள்** | - ரூ.300.00 |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | - Rs.50.00 |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | - Rs.695.00 |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | - Rs.325.00 |
| 4. | **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | - Rs.350.00 |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | - Rs.300.00 |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | - Rs.275.00 |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | - Rs.60.00 |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | - Rs.280.00 |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | - Rs.25.00 |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | - Rs.150.00 |
| 11. | **Innocent Prisoners** | - Rs.495.00 |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | - Rs.350.00 |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | - Rs.300.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 01. | **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் | - ரூ.60.00 |
| 02. | **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி**<br>கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் | - ரூ.30.00 |

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002